பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சூர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 26 செவ்வாய்க்கிழமை (08.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :74



# கௌசல்யனும் 3 புலிகளும் அதிரடித் தாக்குதலில் பலி!

## வன்னியிலிருந்து திரும்பும் சமயத்தில் புனாணை அருகே நேற்றிரவு கொடூரம்

கொழும்பு,பெப்ரவரி 8

பொலன்னறுவை - மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் வெலிகந்தவுக்கு அருகில் புனாணைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனும் மற்றும் மூன்று புலிகள் இயக்கப் பொறுப்பாளர்களும் மற்றொருவரும் கொல்லப்பட்டனர். அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு உட்பட நால்வர் படுகாயமடைந்தனர். சந்திரநேருவின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னியிலிருந்து கொக்கட்டிச்சோலைக்கு நிராயுதபாணிகளாக நேற்றுத் திரும்பிக்கொண்டிருந்த சமயமே இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இந்தத் திடீர்த்தாக்குதலுக்கு கௌசல்யன் அணியினர் இலக்காகினர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று முற்பகல் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைத் தலைமைச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு - அம்பாறை மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து அக்கூட்டத்தில் புலிகளின் தலைவர்களோடு பேச்சுநடத்திவிட்டு கௌசல்யன் கொக்கட்டிச்சோலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்.

நேற்றுமாலை வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியைக் கடந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியூடாக கொக்கட்டிச் சோலையை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யனுக்கு லெப்.கேணல் பதவி!

புனாணையில் நேற்று இரவு இடம்பெற்ற அதிரடித் தாக்குதலில் மரணித்த மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனுக்கு லெப்.கேணல் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அவருடன் உயிரிழுந்த புகலன், செந்தமிழன் ஆகியோருக்கு மேஜர் பதவிகளும் விதிமாறனுக்கு 2ஆம் லெப்ரினன்ட் பதவியும் வழங்கப்பட்டிருப்பதாக அதிகாலை அரசியல்துறை அறிவித்தது.

சம்பவத்தில் சாவடைந்தோருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (எ)

## உயர்தரப் பரீட்சை ஒரே தடவையில் ஜூனில்!

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை இம்முறை ஒரே தடவையிலேயே நடைபெறும். அதுவும் ஜூன் முதல் வாரத்தில் நடக்கும்.

- இவ்வாறு நேற்று கொழும்பில் உத்தியோக பூர்வமாக முடிவெடுக்கப்பட்டதாக அறிய வந்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களுக்குப் பிறிதான - தனியான - உயர்தரப்பரீட்சை நடத்தும் முன்னைய திட்டம் கைவிடப்பட்டுவிட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-7)

## 17 அகதிகள் மீட்பு!

கொழும்பு.பெப்.8

தமிழகத்திலிருந்து தாயகத்திற்குக் கொண்டு சென்று சேர்ப்பார்கள் எனக் கூட்டிவந்து இடையில் கடலில் மணல்திட்டில் கைவிடப்பட்ட அகதிகள் பதினேழுபேரை இலங்கை கடற்படையினர் காப்பாற்றிக் கரைசேர்த்துள்ளனர்.

இச்சம்பவம் சனியன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் அகதிமுகாவில் இருந்த இலங்கை அகதிகளே இந்நிர்க்கதிக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பாக்குநீரினை வழியாகத் தாயகம் திரும்ப ஒவ்வொருவரும் தலா மூவாயிரம் இந்திய ரூபா

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நிதி அமைப்புகள் இன்று புலிகளுடன் ஆய்வு!

## உலக வங்கி, ஆசிய வங்கி, ஜப்பான் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் வன்னிக்கு!

கொழும்பு.பெப்.8

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச உறவுகளுக்கான ஜப்பான் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார்கள்.

அவர்களோடு ஐ.நாவின் பிரதிநிதி ஒருவரும் புலிகளைச் சந்திக்க வன்னி செல்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் மீள்கட்டுமானத் தேவைகள் தொடர்பான தங்களின் மதிப்பீடுகள் குறித்து புலிகளுடன் அவர்கள் ஆராய்வார்கள்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெக்ஸாண்ட் ரோபியோ, உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், சர்வதேச உறவுகளுக்கான ஜப்பான் வங்கியின் பிரதிநிதி ஷின்யா எஜிமா ஆகியோர் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த இழப்பு மற்றும் மீள்கட்டுமானத்துக்கான தேவைகள் ஆகியவை தொடர்பான தமது மதிப்பீடுகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர்கள் பதிலளித்தனர்.

இதுவிடயத்தில் தங்களின் பிரதேசத்தில் பாதிப்பு மற்றும் மீள்கட்டுமானத்துக்கான தேவைகள் குறித்து புலிகள் ஒரு மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துள்ளனர். அவற்றை அவர்கள் எங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். நாம் எமது மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் பரிசீலனைக்கு- அனுப்பிவைத்துள்ளோம்.

அதேபோன்று இலங்கை அரசு முழுநாட்டிலும் ஏற்பட்ட அழிவுகள், பாதிப்புகள், மீள்கட்டுமானத்துக்கான தேவைகள் என்பன குறித்து ஒரு மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துள்ளது.

இந்த மூன்று மதிப்பீடுகளுக்கும் இடையில் - பாதிப்பு மற்றும் தேவைகள் தொடர்பான அளவீடுகளில் - பெரிய வித்தியாசம் ஏதும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

மொத்த ஆழிப்பேரலை அழிவில் மூன்றில் இரண்டு பங்கு - பெரும் பகுதி - வடக்குக் கிழக்கில்தான் ஏற்பட்டுள்ளது என்பது அரசின் அறிக்கையிலேயே உள்ளது என்று உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றுக் குறிப்பிட்டனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பில் புலிகளுக்கு அதிக இடமா? வழங்கவே முடியாது என்பதில் அரசு விடாப்பிடி!

## அதனாலேயே இழுபறி நீடிப்பு

கொழும்பு.பெப்.8

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து இலங்கைத் தீவை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான பணிகளைக் கையாள்வதற்கான பொதுக்கட்டமைப்பை அரசும், புலிகளும் சேர்ந்து உருவாக்குவதில் தொடர்ந்து இழுபறி நிலை நீடிக்கின்றது.

பிரதேச ரீதியில் அமைக்கப்படவிருக்கும் கட்டமைப்பில் புலிகளுக்கு உரிய பெரும்பான்மைப் பங்கு அளிப்பதில்லை என்ற முடிவில் அரசு விடாப்பிடியாக - தீவிரமாக - இருப்பதே இந்த இழுபறிக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு - கிழக்குப் பிரதேச செயலணி ஒன்றை உருவாக்குவதற்குப் புலிகள் யோசனை தெரிவித்துள்ளனர். அந்தப் பதினொரு பேரில் அறுவர் புலிகளாலும், ஏனைய ஐவர் (மூன்று முஸ்லிம்கள், மற்றும் இரு தமிழர்கள்) அரசாலும் நியமிக்கப்படலாம் என்பதே புலிகளின் யோசனை.

ஆனால், அரசுத் தரப்பினால் ஐவரும் (மூன்று முஸ்லிம்கள் மற்றும் இரு சிங்களவர்களும்) புலிகளின் தரப்பில் ஐவருமாக மொத்தம் பத்து உறுப்பினர்களும் அதற்கு மேலதிகமாக ஜனா

(18 ஆம் பக்கம் பார்க்க)

# மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டத்தால் அரசு-ஜே.வி.பி. முறுகல் முற்றுகின்றது

## நடைமுறைப்படுத்தினால் மோசமான விளைவு என எச்சரிக்கை

கொழும்பு,பெப்.8

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முயன்றால் கடும் விளைவுகள் ஏற்படும்.

ஜே.வி.பி. அமைச்சர்கள், எம்.பிக்கள் மற்றும் தேசிய தொழிற்சங்க சம்மேளனத் தரப்பினர் ஆகியோர் அரசை இவ்வாறு எச்சரித்திருக்கின்றனர்.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டம், அந்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பெப்ரவரி 28ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் என இலங்கை மின்சார சபைத் தலைவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஆழிப்பேரலை அனர்த்த விவாதம்: ஜே.வி.பி. பங்குகொள்ளுமா?

## பகிஷ்கரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

கொழும்பு.பெப்.8

ஆழிப்பேரலை அனர்த்தம் மற்றும் அதன் பின்னரான நிலைவரங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாளையும் மறுதினமும் நடைபெறவிருக்கும் இரண்டுநாள் விவாதத்தில் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. பங்குபற்றுமா?

இது குறித்து இன்னும் தெளிவான முடிவு தெரியவரவில்லை.

நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. எனினும், இன்று 2005 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத்திட்ட யோசனைகளையொட்டிய மூன்று நிதிச் சட்டங்கள் மீதான விவாதமே பெரும்பாலும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி செயலகம் முன்பாக மக்கள் நேற்று அமைதிப் போர்

## அரச கொடுப்பனவுகளை உடன் வழங்கக் கோரி!

கிளிநொச்சி,பெப்.8

இராமநாதபுரம், சிவிக்சென்ரர், வட்டக்கச்சி மாவடியம்மன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச செயலகம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு மற்றும் வரட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் போன்ற கொடுப்பனவுகள் தமக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் மேற்படி போராட்டத்தினை நடத்தினர்.

காலை 9 மணியளவில் அங்கு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது செயலக வாசலில் அமைதியாக அமர்ந்திருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமது பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏனைய கிராமங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்ட போதிலும் தமது கிராமங்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் -

இது தொடர்பாகப் பலதடவைகள் எடுத்துக் கூறியும் எவ்வித பலனும் கிட்டவில்லை என்றும் - போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி அரச அதிபரோ அல்லது வேறு அதிகாரிகளோ அங்கு வந்து போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இது தம்மை அவமதிக்கும் செயலாகும் என்று அந்த மக்கள் விசனம் தெரிவித்தனர். மாலை 5 மணியளவில் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (த-305-352)

## முன்பள்ளிச் சிறார் நினைவாக வவுனியாவில் விசேட நிகழ்வு

வவுனியா,பெப்.8

சுனாமித் தாக்கத்தில் பலியாகிய முன்பள்ளிச் சிறார்களின் நினைவாக வவுனியாவில் நாளை விசேட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா முன்பள்ளி மேம்பாட்டு நிலையமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் உயிர் நீர்த்த முன்பள்ளிச் சிறார்களை - முன்பள்ளி ஆசிரியர்களை - நினைவுகூரும் வகையில் நாளை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறும். (எ)

# வடமராட்சிக் கடற்கரைகளில் மரங்கள் கரை ஒதுங்குகின்றன

## இந்தோனேசியாவிலிருந்து வந்தவையா?

கரவெட்டி,பெப்.8

வடமராட்சிக் கடற்கரையோரங்களில் கடந்த சில தினங்களாகப் பாரிய மரங்கள், மரத்துண்டங்கள் கரையொதுங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரிய காட்டு மரங்கள் வெட்டப்பட்ட துண்டங்களாகவும் வேருடன் பிடுங்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த மரங்கள் சுனாமி கடல் அனர்த்தத்தின்போது வேறு நாடுகளின் கரையோரங்களில் இருந்து கடலுக்கு அடித்துவரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இந்தோனேசியாவின் கரையோரக் காடுகளைச் சேர்ந்த மர இனங்களாக இவை இருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

மிகப் பெறுமதி வாய்ந்த தேக்கு, சமண்டலை மற்றும் பெயர் தெரியாத வைர மரங்கள் கரையோரங்களில் ஒதுங்கியுள்ளன. இவற்றுடன் தேங்காய்கள், மீன்பிடி வலைகள், கமுக மரங்கள் என்பனவும் கரையொதுங்குகின்றன.

பொலிகண்டி, திக்கம், சுப்பர்மடம், இன்பருட்டி, முனை ஆகிய கரைகளிலேயே மரங்கள் அதிகம் கரையொதுங்கியுள்ளன. (ஐ-70)

# தேற்றாத்தீவு மக்களும் நேற்று வீதிமறியலில்!

பட்டிருப்பு,பெப்.8

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த தேற்றாத்தீவு வடக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுப் பொதுமக்கள் ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமக்குரிய நிவாரணங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என ஆட்சேபம் தெரிவித்து, நேற்று மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் மறியற்போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இப்போராட்டத்தில் அநேகமான பெண்கள் குழந்தைகளுடன் வீதியின் குறுக்கே அமர்ந்து ஆவேசக்குரல் எழுப்பினர்.

இதனால், மட்டக்களப்பு - கல்முனை வீதியின் இருதிசைகளிலும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணத்தைத் தொடரமுடியாமல் தடைப்பட்டு நின்றன.

அந்தவேளையில், அப்பகுதி விசேட அதிரடிப்படையினர் வாகனத்தில் வந்திறங்கி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து போகும்படி கேட்டனர். ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் அசைந்து கொடுக்கவில்லை.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் தம் முன்னிலையில் வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என உறுதிமொழி அளித்தால் தவிர, தாங்கள் வீதி மறிப்புப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனத் திட்டவட்டமாக அவர்கள் தெரிவித்தனர்.

அதன் பின்னர் விசேட அதிரடிப் படையினர் திரும்பிச் சென்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் எஸ்.பாஸ்கரனுடன் வந்தனர்.

அங்கு பிரதேச செயலாளர் பாஸ்கரன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் இன்னும் 10 நாள்களுக்குள் வழங்கத் தாம் நடவடிக்கை எடுப்பார் என உறுதியளித்தார்.

பிரதேச செயலாளரின் உறுதிமொழியைத் தொடர்ந்து வீதி மறிப்பு ஆர்ப்பட்டக்காரர்கள் அனைவரும் அமைதியாகக் கலைந்துசென்றனர். (எ-க)

# சுனாமி பாதித்தோரின் நலன்வேண்டி நாரந்தனையில் இன்று பிரார்த்தனை

## ஆயிரத்து எட்டுத் தீபங்கள் ஏற்றப்படும்

யாழ்ப்பாணம்.பெப்.8

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டியும், படுகாயமடைந்த மக்கள் நலம் பெறவேண்டியும் நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

மனோன்மணி அம்பாள் ஆலய சைவ மகாசபை இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றுதல், ஆயிரத்து எட்டுத் தீபங்கள் ஏற்றுதல் இடம்பெறும்.

தலைமையுரை. ஆசியுரை, சிறப்புவிருந்தினர் உரை என்பனவற்றுடன் பிரார்த்தனை நிகழ்வுகள் நிறைவுபெறும். (எ)

# நிவாரணக் குளறுபடிகள் பற்றிய புகார்களைப் பெறத் தனிப்பிரிவு

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை

கொழும்பு,பெப்.8

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியமுறையில் நிவாரணப் பொருள்கள் கிடைக்காமை குறித்த முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ள விசேட பிரிவொன்று அமைக்கப்படவுள்ளதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல்வேறு மாகாணங்களில் இருந்தும் தமக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே இவ்வாறான பிரிவொன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தாம் மேற்கொண்ட விஜயங்களின் போது தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளில் அதிகம் நிவாரணம் கிடைக்காமை பற்றியவையே எனவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

# பகிழவதையை எதிர்க்கும் மாணவரை ஒன்றியம் வரவேற்று அரவணைக்கும்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உபதலைவர் சி.சிவரூபனின் பதவி விலகலை மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. பகிடிவதை போன்ற ஒழுக்கக்கேடான செயல்களைத் தடுப்பதில் முன்னின்று செயற்படுகின்ற மாணவர்களை மாணவர் ஒன்றியம் அரவணைத்துக்கொள்ளவே விரும்பும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார் இவ்வாறு உதயனுக்கு விளக்கமளித்திருக்கிறார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாகக் கூறப்படும் - ஒருசாரார் சம்பந்தப்பட்ட - பகிடிவதைத் துன்புறுத்தல்களை - அம்பலப்படுத்துவதற்காகத் தமது பதவியைத் துறப்பதாக மருத்துவ பீடமாணவர் ஒருவர் வெளியிட்டிருக்கும் கடிதம் தொடர்பாகக் கேட்டபோதே மாணவர் ஒன்றியத் தலைவர் இப்படித் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய வருடத்துக்கான உபதலைவரும் மருத்துவ மாணவர் ஒன்றிய அவை உறுப்பினருமாகிய சி.சிவரூபன் என்பவரே தனது பதவிப் பொறுப்புகளில் இருந்து விலகிக்கொள்ளப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

பகிடிவதைச் சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே அவர் தனது பதவிப் பொறுப்புக்களைத் துறக்கமுன்வந்துள்ளார். இதுகுறித்து மாணவர் ஒன்றியம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அதன் தலைவர் செல்வகுமாரிடம் கேட்டோம்.

அதற்கு அவர் கூறியதாவது:-

எமது பண்பாட்டுக்கு உதவ பகிடிவதை எமது மண்ணில் இருந்து வேரோடு களையப்பட வேண்டியது. இதில் மாணவர் ஒன்றியத்துக்கு இரண்டாவது கருத்துக் கிடையாது.

பல்கலைக்கழகத்தினுள் ஒழுங்கைப் பேணுவதில் சிரத்தைகாட்டிச் செயற்படுகின்ற மாணவர்களை மாணவர் ஒன்றியம் வரவேற்று அரவணைக்கும். அந்தவகையில், பகிடிவதைக்கு எதிராகச் செயற்படுகின்ற சிவரூபன் போன்ற மாணவர்களை இழப்பது என்பதை மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளாது. எனவே, அவரது பதவி விலகலை ஒன்றிய நிர்வாகம் ஏற்றுக்கொள்ளாது. இது குறித்து மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்துடன் கலந்துரையாட உள்ளோம் - என்று தெரிவித்தார்.

*(மாணவர் ஒன்றியத்தின் அறிக்கை 5 ஆம் பக்கத்தில்)* (ஐ)

## முற்றோதல்

யாழ்ப்பாணம்,பெப்.8

ஆவரங்கால் சிவன் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தை அமாவாசையை முன்னிட்டு அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. (எ-12)

# வலிகாமம் கொத்தணிக்கு புதிய நெறியாளர் குழு

வலி.தெற்கு,பெப்.8

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியின் புதிய நெறியாளர் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொத்தணியின் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் மானிப்பாய் கொத்தணிச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய தலைவராக இ.செல்வரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன், உபதலைவராக ப.குமாரவேல், செயலாளராக க.விஜயகரன் ஆகியோரும் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மானிப்பாய், சுன்னாகம், தெல்லிப்பழை, சங்கானை, பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் ஆகிய ஏழு சங்கங்களின் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் அதன் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மேற்படிச் செயற்குழுவுடன் இணைந்து முன்னெடுக்கவும் அங்கத்துவ நிறுவனங்கள் கூடிய பங்களிப்புடன் செயற்படும் எனவும் அங்கத்துவ சங்கங்களின் சார்பில் உறுதியளிக்கப்பட்டது. (த-152)

## கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டு வரும்

# நீர்த்தாங்கியின் உச்சியிலிருந்து வீழ்ந்த தொழிலாளி மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.8

கிளிநொச்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் பாரிய நீர்த்தாங்கியிலிருந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்த தொழிலாளி ஒருவர் மூன்று நாள்களின் பின்னர் நேற்றுக்காலை உயிரிழந்தார்.

நீர்த்தாங்கியின் நிர்மாண வேலைகளுக்காகப் பொருள்களை உயர்த்தும் பொறித்தொகுதி மூலம் சிமெந்துக் கலவையை நீர்த்தாங்கியின் மேற்பகுதிக்கு எடுத்துச் சென்றார் என்றும் -

அப்போது அந்தப் பொறித்தொகுதியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அது அறுந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த அவர், கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

அங்கு அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த மூன்று தினங்களாகச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. எனினும், சிகிச்சை பலனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார்.

மகியங்கனையைச் சேர்ந்த 23 வயதுடைய இராமச்சந்திர வசந்த என்ற தொழிலாளியே உயிரிழந்தவராவார். தென்னிலங்கையில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து மேற்படி நீர்த்தாங்கியை நிர்மாணிக்கும் தொழிலாளிகளில் ஒருவராக அவர் பணிபுரிந்தும் வந்தார்.

அவரது சடலத்தை அவரது சொந்த ஊரான மகியங்கனைக்கு அனுப்பிவைப்பதற்குரிய ஏற்பாடுகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (த-7)

# தாய்லாந்து பிரதமராக மீண்டும் தக்ஷின் ஷின்வத்ரா தெரிவு

பாங்கொக்,பெப்.8

தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் தக்ஷின் ஷின்வத்ரா மறுபடியும் வெற்றிபெற்றுள்ளார். தான் வெற்றிபெற்றதை அடுத்து அவர் மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தாய்லாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் தக்ஷின் ஷின்வதராவின் மக்கள்நேசக்கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று தனிக்கட்சி அரசு ஒன்றை அமைக்கும் நிலைக்கு வந்துள்ளது.

நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தற்போதைய பிரதமர் தக்ஷின் ஷின்வத்தரா மற்றொரு பதவிக்காலத்திற்குத் தெரிவுசெய்யப்படுவது உறுதியாகியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்து நிர்வாகத்தைக் கையாண்ட விதம் குறித்தும், தாய்லாந்தின் பொருளாதாரம் நன்கு முன்னேறிவருவதன் காரணமாகவும் வாக்காளர்கள் இந்த வெற்றியை ஷின்வத்ராவுக்கு வழங்கியிருக்கின்றனர் எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று தேர்தல் முடிவுகள் வெளியாகி வந்த சமயம் ஆறு தொலைக்காட்சி நிறுவனங்களும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் நேற்றுமுன்தினம் கருத்துக் கணிப்பொன்றை நடத்தியுள்ளன.

இதனடிப்படையில், 500 ஆசனங்களைக் கொண்ட தாய்லாந்து நாடாளுமன்றத்தில் 399 ஆசனங்களைப் பிரதமரின் மக்கள்நேசக்கட்சி கைப்பற்றும் எனத் தெரியவந்துள்ளது.

உத்தியோகபூர்வ அடிப்படையிலான பெறுபேறுகளும் இதே நிலைமையைப் பிரதிபலிக்குமானால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒருவர் இரண்டாவது பதவிக் காலத்திற்கும் தெரிவுசெய்யப்படும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெறுபேற்றை ஷின்வத்ரா கொண்டிருப்பார்.

தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தாய்லாந்தின் முதல் பிரதமர் தக்ஷின் ஷினவத்ராவே என்பது குறிப்பிடத்தக்கது.

ஷின்வத்ரா நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தாய்லாந்தின் 6 கோடி 30 லட்சம் மக்களும் தனது இரண்டாவது பதவிக்காலத்தின்போது சிறந்த தலைமைத்துவத்தைப் பெறுவார்கள் என்று உறுதி கூறினார். தாய்லாந்துப் பங்குச் சந்தை இரண்டு வீத அதிகரிப்பைக் காண்பித்துள்ளது.

இச்செய்தி எழுதும்போது தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகிக்கொண்டிருந்தன.

நேற்று அறிவிக்கப்பட்ட 395 தேர்தல் முடிவுகளில் 308 ஸ்தானங்களை மக்கள்நேசக்கட்சி வென்றெடுத்துள்ளது. அநேகமாக 375 ஆசனங்களை அக்கட்சி கைப்பற்றும் என்று அவதானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகம் கட்சி அதன் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளது. தனிக்கட்சி அமைக்கும் நிலைக்குப் பிரதமர் ஷின்வத்ரா வந்துள்ளதையடுத்து தாம் மகிழ்ச்சி அடைகிறார் எனவும் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் 201 ஆசனங்களை ஜனநாயக்கட்சி பெற்றிருந்தபோதிலும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் 80 ஆசனங்களை மாத்திரமே பெறும் எனத் தெரிகிறது.

தேர்தல் அதிகாரிகள் தகவல் தருகையில்- 146 முறைப்பாடுகளை மாத்திரமே தாம் பெற்றுள்ளார்கள் எனத் தெரிவித்தார்கள். முன்னாள் நிதியமைச்சரின் ஆலோசனை இருந்த ஓலான் புதிய அரசின் நிதியமைச்சர் பதவியை வகிப்பார் என்றும் -

முன்னாள் நிதியமைச்சர் சொம், பிரதிப்பிரதமராக நியமிக்கப்படுவார் என்றும் - பாங்கொக் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வாக்குப் பதிவில் பங்குகொண்ட மக்களுக்குப் பணம் வழங்கிய முறைகேடும் பரவலாக இடம்பெற்றுள்ளது என தாய்லாந்தின் தேர்தல் ஆணைக்குழு குற்றஞ்சாட்டியது.

தாம் குறித்த நபருக்கே வாக்களித்தோம் என்பதைக் கட்சித் தொண்டர்களுக்குக் காண்பப்பதற்காக வாக்குச்சீட்டை செல்லிடத் தொலைபேசியில் படமெடுத்திருந்தவர்கள் பிடிபட்டால் தகுந்த தண்டனை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (க-8)

## காஷ்மீரில் ஆளும் கட்சி வெற்றி

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அனந்தநாக், புல்வாமா மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் உள்ளூராட்சித் தேர்தல் நடந்தது.

வாக்குப்பதிவு முடிந்ததும் உடனடியாக வாக்கு எண்ணிக்கையும் நடந்தது.

இதில் பெரும்பான்மையான இடங்களை ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியும், அதன் கூட்டணிக்கட்சியான காங்கிரஸும் கைப்பற்றின.

குவாசிகந்த சபையை எதிர்க்கட்சியான தேசிய மாநாட்டுக்கட்சி கைப்பற்றியது.

மாநில முதல்வரும், மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவருமான முப்தி முஹம்மது சயீத்தின் சொந்த நகரமான பிஜ்பெகராவில் மக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது. கம்யூனிஸ் கட்சிகள் ஆதிக்கமிக்க குல்காமில் ஏழு இடங்களில் சுயேச்சைகள் வெற்றிபெற்றன.

மூன்று இடங்களில் தேசிய மாநாட்டுக்கட்சியும், காங்கிரஸ் ஓர் இடத்திலும் வெற்றிபெற்றன. (க-8)

## அந்தமானில் நேற்று நில அதிர்வு!

புதுடில்லி,பெப்.8

அந்தமானில் உள்ள கமோர்டா தீவு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நேற்று லேசான நில அதிர்வு ஏற்பட்டது.

காலை 5.44 மணிக்கு ஏற்பட்ட இந்த நில அதிர்வு 5.3 ரிச்டர் புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

## காஷ்மீரில் ஆறு பொலீஸார் பலி

ஸ்ரீநகர்,பெப்.8

காஷ்மீரில் உள்ள ஜம்மு - ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் உள்ள பனிமலையில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஆறு இந்தோ - திபத் எல்லைப் பாதுகாப்புப் பொலீஸார் உயிரிழந்தனர். (க-8)

### உலக அரங்கில்

## 300 அடி பள்ளத்துள் பஸ் வீழ்ந்ததில் 27 பேர் பலி!

உதாம்பூர்,பெப்.8

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற கோர பஸ் விபத்தொன்றில் 27 பேர் உயிரிழந்தனர்; மேலும் 35 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீர் மாநிலத்தின் உதாம்பூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தக் கோர விபத்து ஏறபட்டதாக காஷ்மீர் மாநிலத் துணைப பொலீஸ் மா அதிபர் சாட்வீர் குப்தா தெரிவித்தார்.

உதாம்பூர் மாவட்டத்தின் ராம்பூர் எனும் இடத்தில் இருந்து புறப்பட்ட பஸ் மலைப் பாதையில் செல்லும்போது 300 அடி பள்ளத்தில் உருண்டு விபத்துக்குள்ளானது அவ்விடததிலே 25 பேர் உயிரிழந்தனர்.

மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற வேளை மேலும் இருவர் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும் ஈடுபட்டனர்.

வட இந்திய மலைப்பாதைகளில் தொடர்ந்து இவ்வாறான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

விபத்துக்குள்ளான பஸ், அதிக எண்ணிக்கையான பிரயாணிகளுடன் மிகவும் வேகமாக வந்துள்ளது எனவும் இதனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் வட இந்திய மலைப் பகுதியில் பஸ் ஒன்று இதேபோன்று ஆற்றுக்குள் வீழ்ந்ததால் 24 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்திய போட்டியில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.உதைப்பந்தாட்ட லீக் நடத்திய உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன உபதலைவரும் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனப் பிரதிநிதியுமான அமரர் ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா ஞாபகார்த்தமாக 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டமாக இது நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சம்பியனான சென்.அன்ரனிஸ் விளையாட்டுகழக அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தினைப் பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 2 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் இ.ஆனல்ட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் போது சேகரிக்கப்பட்ட நிதி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (10-203-190)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.8

சென்ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் பேணாட் பேட் கலந்து கொள்ளவுள்ளார். (10-203-190)

## யாழ்.மத்திய கல்லூரியின் மரதன் ஓட்ட போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்.மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

☆ 15 வயதுப்பிரிவு:-

ஞா.றெஜிநேசன் (முதலாமிடம்), ஜே.திவாகரன் (இரண்டாமிடம்), ரி.சுரேந்திரன் (மூன்றாமிடம்),

☆ 17 வயதுப்பிரிவு:-

ஜெ.வியாசன் (முதலாமிடம்), சு.நிரோசன் (இரண்டாமிடம்), உ.நிரோஜன் (மூன்றாமிடம்)

☆ 19 வயதுப்பிரிவு:-

க.கவிராஜ் (முதலாமிடம்), மனோராஜ் (இரண்டாமிடம்), கிரிசாந்தன் (மூன்றாமிடம்).

☆ 21 வயதுப்பிரிவு:-

அன்ரனிதாஸ் (முதலாமிடம்), அசிலேசன் (இரண்டாமிடம்), இலங்கேஸ்வரன் (மூன்றாமிடம்).

(10-203-190)

## சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவருகின்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் மகாஜனக் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸாலும் 6 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது.

கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இந்தப்போட்டி இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து தனது முதல் இன்னிங்ஸில் 92 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் அணி வீரர் மயூரன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணியைச் சேர்ந்த மதன்ராஜ் 67 ஓட்டங்களையும், பினோஸ் 40 ஓட்டங்களையும், நிருபன் 35 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் தனஞ்சயன் 36 ஓட்டங்களையும் ரவிசாந்த் 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் மதன்ராஜ் 5 விக்கெட்டுக்களையும், சஞ்ஜீவன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (10-203-190)



யாழ்.மத்திய கல்லூரி மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கு இடையே நடைபெற்ற படகோட்டப் போட்டியில் கலந்துகொண்ட இல்ல வீரர்களையும் பொறுப்பாசிரியர்களை, அதிபா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## பாடசாலை அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகளில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 12ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

☆ கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் -

☆ மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியும்-

☆ சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும்-மோதவுள்ளன.

(10-203-190-51)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தில் வீட்டுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 2223280, 0114819311, 0115342178. (41833)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம், நாவலடியில் 35 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 226 3441, 0112733144. (41822)

## மணமகன் தேவை

1970ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், பாவம் குறைந்த, விவாகரத்துப்பெற்ற மணமகளுக்குத் தகுந்த, தகுதியான உள்நாடு, வெளிநாட்டில் அமையக்கூடிய மணமகன் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல. 286, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (41820)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1968இல் பிறந்த 5'2" உயரமுடைய உத்தரம், கன்னிராசியும் கிரகபாவமற்ற, செவ்வாய் தோஷமில்லாத B.A. (Hons) Dip.in Edu. ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. (அரச உத்தியோகத்தர், சுயதொழில் செய்வோர் U.Kயில் P.R உள்ளவர்கள் விரும்பத்தக்கது) தொடர்புக்கு விளம்பர இல.2500, மே.பா. உதயன் யாழ்ப்பாணம். (41842)

1969 பிறந்த உத்திர நட்சத்திரம், முதலாம் பாதம் 4இல் செவ்வாயுள்ள பட்டதாரி ஆசிரியைக்கு (நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு) உள்ளூர் உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. T.P 0777-514427. (41842)

## மணமகள் தேவை

1974இல் பிறந்த U.Kஇல் வசிக்கும் அனுஷ நட்சத்திர இலக்கணத்தில் செவ்வாயுள்ள B.Com பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான, சிவந்த, அழகான, படித்த பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்காதேவி, தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி T.P 0777 514427. (41850)

1975இல் பிறந்த, 8இல் செவ்வாய், சதய நட்சத்திரம், U.Kஇல் வசிக்கின்ற அழகிய மணமகனுக்கும் 1972இல் பிறந்த உத்தராட நட்சத்திரம் 4ஆம் பாதம் 5'8" உயரமான மணமகனுக்கும் U.K இல் பிரஜாவுரிமையுள்ள மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி T.P. 0777 514427. (41849)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி விண்டாலக்சுமி யூட் சதீஸ்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

## சின்னப்பு பரமநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (ஆசிரிய வட்டம்).
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆளணியினர்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் நல்லையா பிரகலாதன்

(கண்ணன்)

மாயவன் படைப்பு 03-10-1978 — சுனாமியின் அழிப்பு 26-12-2004

கடலுடன் கலந்து கண்ணனுடன் சேர்ந்த
கண்ணாவே! உன் ஆத்ம சாந்திக்கு
கலங்கும் உறவுகளின் கண்ணீர் அஞ்சலி!

26.12.2004 அன்று கீரிமலையில் அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் கீரிமலை புனித புண்ணிய தீர்த்தக் கரையிலும், சபீண்டீகரணக் கிரியைகள் நாளை மறுதினம் (10.02.2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*காளி கோயிலடி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

\- குடும்பத்தினர்.

(41845)(26-11-19-21)

# காமன்ஸ் வேலைக்கு ஆள் தேவை

றொஷானி காமன்ஸிற்கு
தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை
தொடர்பு: *றொஷானி காமன்ஸ்*,
இல.263/1, இராஜகாரியார் வீதி, மானிப்பாய்.
கிளை: றொஷானி காமன்ஸ்
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(41601)(21-11-45-26)

# Active Theatre Movement

## செயல்திறன் அரங்க இயக்கம்

கிராம அபிவிருத்திச் செயற்றிட்டம் - அரங்கினூடாக அரங்கக்களநிலைச் செயலாளிகளை இணைத்துக் கொள்ளல்.

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்துகின்ற அரங்கினூடான கிராம அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் புதிதாக அரங்கக் களநிலைச் செயலாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்காகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஒரு மாதகாலம் நடைபெறும் பயிற்சியில் பங்கு கொள்வதை அடிப்படையாகக் கொண்டு தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.
- தேர்வு செய்யப்படுபவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்.

வேண்டப்படும் தகைமைகள்:

1. G.C.E. A/L உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்.
2. நாடகமும் அரங்கியலும் துறையில் பயிற்சி
3. நாடகத் துறையில் ஈடுபட்ட அனுபவம்
4. வயதெல்லை 20-30

விண்ணப்ப முடிவு திகதி: 15.02.2005

அனுப்பவேண்டிய முகவரி:

**செயல்திறன் அரங்க இயக்கம்**
'அருளகம்',
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

(சி-40851) (21-11-19-42)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அழகம்மா கந்தசாமி (மேரிபோல்)

(முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியை, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி)



சமரபாகு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கிராமக்கோட்டுச் சந்தி, புலோலி தெற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா கந்தசாமி அவர்கள் நேற்று (07.02.2005) திங்கட்கிழமை மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், வனஜா (கனடா), தயாநிதி (கனடா), அற்புதமலர் (ஆசிரியை, யா/சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை), சத்தியானந்தன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), நித்தியானந்தம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத்திணைக்களம், மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஞ்ஜித் (கனடா), அன்ரன் ஜெயக்குமார் (கனடா), மத்தேயு (டோகா கட்டார்), சுகந்தி (பகுதிநேர ஆங்கில ஆசிரியை, யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), ஜோதி (குடும்பநல உத்தியோகத்தர், மன்னார்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆஷா (கனடா), மதுஷா, லதுஷிகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.02.2005) புதன் கிழமை பி.ப.2.00 மணிக்கு கிராமக்கோட்டுச் சந்தியில் அமைந்துள்ள இலங்கை பெந்தகொஸ்தே சபைச் சாலையில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறையில் உள்ள சுப்பர்மடம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை விசுவாசிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னையா கந்தசாமி
(கணவர்).

*கிராமக்கோட்டுச்சந்தி,*
*புலோலி தெற்கு, பருத்தித்துறை.*
T.P.077 3164542, 077 3164568,
077 61505136

(41841)(39)

## திருமதி இம்மானுவல் மாகிறெற்



பலாலி, தொட்டுவையைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்து வந்தவருமாகிய திருமதி இமமானுவல் மாகிறெற் 06-02-2005 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம ஞானப்பு தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற இம்மானுவலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மரியம்மாவின் சகோதரியும் மொனிக்கா (Srilanka), யேசுதாசன் (London), கிறிஸ்ரி (London), ஸ்ரொலா (London) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியநாதன், கீதா, காலஞ்சென்ற ராணி மற்றும் ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 73,
கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.பாக்கியநாதர்
(மருமகன்)

லண்டன T.P.No. 0044 2085523188
(41851)(46)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாண சபை
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ" கடன் இல. 1846 - SRI(SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் இல: 05

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD/FI/05 | வல்வெல்டித்துறையில் உள்ள மீன் சந்தையை புனர்நிர்மாணம் செய்து பூர்த்தி செய்தல் | M7 | 36,000/= |
| 02 | JF/NECORD/ED/19 | அரியாலை சிறீ பார்வதி வித்தியாசாலையில் 110'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் பூர்த்திசெய்தல். | M8 | 22,000/= |

3. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 021 2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல் : necordjf@sltnet.lk.
4. ஒப்பந்த ஆவணங்கள் மாசிமாதம் 10ஆம் திகதி முதல் மாசி 25ஆம்திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல்3.00 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "*தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்* இற்கு பங்குனி மாதம் 4ஆம் திகதி பி.ப.3.00மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
6. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மாசி மாதம் 22ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

**க.கணேஷ்,**
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரச அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

(C/40850)(42-21-19-11)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## சிறுவர் எதிர்காலம்; புலிகளின் பங்களிப்பு

தமது படைக்கு சிறுவர்களை விடுதலைப் புலிகள் சேர்க்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு மீண்டும் ஊதிப் பெருப்பித்து பிரசாரப்படுத்தப்படுகின்றது. சற்றுக் காலம் தணிந்திருந்த இந்தப் பிரசாரம் இப்போது ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்து மீண்டும் தென்பகுதி ஊடகங்களில் இடம்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் இரண்டு பரிமாணத்தில் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான அவர்கள், ஒருபுறம் அரசியல் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று வழிநடத்தும் அதேசமயம், மறுபுறம் தமிழர் தாயகத்தின் இராணுவத் தலைமையையும் ஏற்றுச் செயற்படவேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த இரட்டைப் பொறுப்பில் அவர்கள் ஆற்றும் பணியை - கடமையை புரிந்துகொள்ளமுடியாத அல்லது புரிந்துகொள்ள விரும்பாத சக்திகளே இது விடயத்தில் புலிகள் மீது அளவுக்கு அதிகமாக அவதூறுக் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்கு முந்திய யுத்தகால அழிவுகளின்போதும் சரி, ஆழிப்பேரலை அனர்த்தத்தையொட்டிய அழிவுகளின்போதும் சரி இதுதான் உண்மை நிலைமை; யதார்த்தம்.

யுத்த காலத்தில் தென்னிலங்கை அரசுப்படைகள் தமிழர் தாயகத்தில் மேற்கொண்ட கொடூர இராணுவ நடவடிக்கைகளினால் பெற்றோரை இழந்து அநாதைகளான தமிழ்ப்பிஞ்சுகளின் எண்ணிக்கை அதிகம்.

இராணுவ நெருக்குவாரங்கள், கெடுபிடிகள், நடவடிக்கைகளினால் வாழ்வாதாரங்களை - வீடு வாசல் உடைமைகளை - ஜீவனோபாய வழிகளை - குடும்ப உழைப்பாளிகளை - இழந்த தமிழ்க்குடிமக்கள், அகதிகளாக அலைந்து நலன்புரி நிலையங்களிலும், முகாம்களிலும் ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந்தனர். இத்தகைய குடும்பங்களில் ஒரு வேளை சோற்றுக்கு வசதியின்றி நிர்க்கதியான சிறுவர்கள் ஏராளம்.

இத்தகைய குழந்தைகள், சிறுவர்கள், புலிகளின் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர் அல்லது அவர்களைத் தாமே பொறுப்பேற்கவேண்டிய நிலைக்கு உள்ளானார்கள் விடுதலைப் புலிகள்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இதேபோன்று தமிழர் தாயகப் பகுதியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - அநாதைகளாகி அல்லது குடும்ப உழைப்பாளிகளை இழந்து அல்லலுறும் மழலைகளின் எண்ணிக்கை ஐநூறைத் தாண்டும் என்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

யுத்த காலத்திலும் சரி, இப்போது யுத்த நிறுத்த காலத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் சரி தமிழர் தாயகத்தில் இப்படி நிர்க்கதியாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கு - இன்று புலிகளைத் தவறாகக் குற்றம் சொல்லி விமர்சிக்கும் ஊடகங்களும், சர்வதேச விட்டாரங்களும் - தமிழர் தாயகத்தில் என்ன ஏற்பாடுகளைச் செய்திருந்தன? ஒன்றுமில்லையே!

அநாதைகளாகி நிர்க்கதியுற்று, அடுத்த வேளைக்கு உணவும், உரிய பராமரிப்பும், வழிகாட்டலும், கவனிப்புமின்றி ஏதிலிகளாகத் தவிக்கும் இச் சிறுவர்களின் மறுவாழ்வுக்கு என்ன ஏற்பாடுகளை இப்படி விமர்சிப்பவர்கள் செய்திருக்கின்றார்கள்?

தமிழர் தாயகத்தின் அரசியல், நிர்வாக இராணுவக் கட்டமைப்புகளுக்குத் தலைமை வகித்து வழிநடத்தும் புலிகள், இச்சிறார்களின் பொறுப்பை ஏற்று, அவர்களுக்கென நலன்புரி மையங்கள், மறுவாழ்வு நிலையங்கள், புனர்வாழ்வு முகாம்கள், பராமரிப்பு இல்லங்கள் அமைத்து, அவர்களின் நல்வாழ்வுக்கு வழிசமைக்கிறார்கள்; பல கோடி ரூபாவுக்கான நல்வாழ்வுத்திட்டங்களைத் தாமே செயற்படுத்துகின்றார்கள்.

புலிகள் அப்படிச் செய்ததும், 'புலிகள் இராணுவ அமைப்பு. அவர்கள் தமது படைக்குச் சிறுவர்களைச் சேர்க்கின்றார்கள்' - என்று கூக்குரலிடுகின்றன சில சக்திகள்.

உண்மையில் புலிகள் அப்படி அந்த சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கின்றார்களா அல்லது அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்களா என்பதை ஆழமாக ஆராயாமல் மேலோட்டமான, அரைவேக்காட்டுத் தன்மையான விமர்சனங்கள் பறக்கின்றன.

யுத்தத்தாலும், ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் சிறுவர்கள் தமிழர் தாயகத்தில் உள்ளனர். அவர்களின் மறுவாழ்வைப் பொறுப்பேற்க வேண்டிய கடப்பாடும், தார்மீகப் பொறுப்பும் உடைய சர்வதேச அமைப்புகள் அந்தப் பணியில் எத்தனை வீதத்தைத் தாம் பூர்த்தி செய்திருக்கின்றன என்ற உண்மையை மனச்சாட்சிக்குப் பங்கமில்லாமல் வெளிப்படுத்த முன்வரவேண்டும். அவை அதனைப் பகிரங்கப்படுத்த முன்வந்தால் இது விடயத்தில் புலிகளின் பங்கு பணி மெச்சப்படுமே தவிர, தூற்றப்படமாட்டாது.

போரழிவையும், பேரழிவையும் சந்தித்த தமிழர் தாயகத்தில் அந்த அழிவுகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியர்களின் எதிர்கால வாழ்வு தொடர்பாக அப்பிரதேசத்தின் அரசியல், நிர்வாகத் தலைமை என்ற முறையில் புலிகள் அமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இராணுவ அமைப்பு என்ற வகையில் அதன் செயற்பாட்டோடு கலந்து, குழப்பிக் கருத்து வெளியிடுவதை இச்சக்திகள் நிறுத்தவேண்டும்.

# பகிடிவதையை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒத்துழையுங்கள்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.8

சமூகம் வெறுத்து ஒதுக்குகின்ற பகிடிவதையை பல்கலைக்கழகத்துக்குள் ஒருபோதும் நாம் அனுமதிக்கப் போவதில்லை. இந்தச் செயலை முற்றாக நிறுத்துவதற்கு சகல தரப்பினரும் சகல வழிகளிலும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதைகள் தொடர்வதாக பல்வேறு தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை சகல மாணவர்களுக்கும் மாணவர் ஒன்றியமாகிய நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பல்வேறு பாதிப்புக்களின் மத்தி யில் தமது உயர் கல்வியைத் தொடர வேண்டும் என்ற இலட்சியத்துடன் பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்கள் மீது பகிடிவதை என்கின்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவ தினை மாணவர்கள் நிறுத்தவேண்டும் என்பதனை அறியத் தருகின்றோம். இயற்கை அனர்த்தத்தினால் உடைமைகள் இழந்து உறவினர்களின் உயிர்களைப் பறிகொடுத்து, மனரீதியாக பல்வேறு பாதிப்புக்குள்ளாகிய நிலையில் பல மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்புக்காக கால்பதிக்கும் வேளையில், நாகரிக மற்ற செயற்பாடாகவே இந்தப் பகிடிவதை அமையும் என்பதனை நாம் குறிப்பிட விரும்புகிறோம். அத்தோடு ஒருசில பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் பகிடிவதை என்கின்ற அநாகரிகமான செயற்பாட்டினால் ஒட்டுமொத்த மான பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தினுடைய நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்ற நடவடிக்கையாகவே இந்தப் பகிடிவதை அமைகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நேசக்கரம் கொடுத்து மனிதநேயத்துடன் வரவேற்பதே இந்த நேரத்தில் அவர்களுக்கும் சமூகத்துக்கும் நாம் ஆற்றும் சேவையாக அமையும். இதனை விடுத்து புதிய மாணவர்களைப் பயமுறுத்தும் செயற்பாடுகளிலும் மனரீதியான அழுத்தத்தினை ஏற்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது நாகரிகமற்ற, மனிதநேயமற்ற செயற்பாடாகும். எனவே புதிய மாணவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்கு உதவிகளைச் செய்து அவர்களுடைய கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் படி சகல மாணவர்களையும் அன்புடன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனையும் மீறி பகிடிவதைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் பூரண ஒத்துழைப்பினை வழங்குவோம். அத்தோடு பகிடிவதைகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், ஏனைய ஊடகங்கள் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். சமூகத்தினால் விரும்பத்தகாத பகிடிவதை என்ற செயற்பாட்டினை தொடர்ந்தும் பல்கலைக்கழகத்துக்குள் நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஆகவே இந்த நடவடிக்கையினை முற்றாக நிறுத்துவதற்கு சகல வழிகளிலும் சகல தரப்பினரிடமிருந்தும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

புதிய மாணவர்களை அன்போடு வரவேற்று தங்கள் மீது யாராவது பகிடிவதை செயற்பாட்டினை மேற்கொண்டால் இது தொடர்பாக எமது மாணவர் ஒன்றியத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும், அவ்வாறான பகிடிவதை செயற்பாட்டிற்கு எதிராக மாணவர் ஒன்றியம் உடனடி நடவடிக்கை எடுக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம். எனவே, புதிய மாணவர்களுடைய கல்விச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதற்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் எப்பொழு தும் தயாராக இருக்கின்றோம் என்பதனை அறியத்தருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வழுக்கியாறு புனரமைப்புத் தொடர்பான ஆலோசனைகளை அனுப்பி வைக்கவும்

## நீர்ப்பாசனத் திணைக்கள பிரதித் திட்டப் பணிப்பாளர்

வலி.தெற்கு.பெப்.8

வழுக்கியாறு புனரமைப்புத் தொடர்பான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து வடிவில் தமக்கு அனுப்பிவைக்குமாறு விவசாய சம்மேளனங்கள், விவசாயிகள், ஏனைய அமைப்புக்களிடம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் ஏ.சி. விநோதராசா கோரியுள்ளார்.

நியாப் திட்டம் இரண்டின் கீழ் வழுக்கியாற்று புனரமைப்பு முதற்கட்டவேலைகள் ஆரம்பமாக இருப்பதால் வேலைகளை முழுமையாக மேற்கொள்வதற்குத் தேவையான திட்டங்களை வகுப்பதற்கும் உரிய செலவீனங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொது அமைப்புக்கள், விவசாய சம்மேளனங்களிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

வழுக்கியாற்றுப் படுக்கை தொடர்பான இடங்களில் அத்துமீறி மக்கள் குடியேறியுள்ள இடங்கள், விவசாயம் மேற்கொள்ளப்படும் இடங்கள் என்பனவற்றைத் தெளிவான முறையில் அடையாளம் காட்டிப் பட்டியல் படுத்தித் தெரியப்படுத்தினால் அவற்றை மீளப்பெற்று வழுக்கையாற்றுப் புனரமைப்புடன் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

(10-152)

# சிற்றூர்திகளின் பாவனைக்கு எரிபொருள் நிரப்பு நிலையம்

வலி.வடக்கு.பெப்.8

யாழ். மாவட்டத்தில் சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் பயன்பாட்டிற்கென தனியான எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப் பட்ட தனியார் பஸ் தரிப்பிடக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட இலங்கை தனியார்பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிற்றூர்திச் சங்கத்தினருக்கு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது சம்பந்தமாக நிதியமைச்சர்களுடன் பேசி அதற்கான அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளரே சுனாமி அனர்த்த செயற்பாட்டிற்கும் பொறுப்பாக இருப்பதனால் உடனடியாக அச் செயற்பாட்டைமேற் கொள்ள முடியவில்லை.

இப்பணியை விரைவில் நிறைவு செய்யவேண்டும் எனக் கோரிக்கை எடுத்துள்ளேன். விரைவில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(10-86)

# புதிய கல்வியாண்டுக்கான பதிவுகளை உடனடியாகச் செய்யுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ். பல்கலைக்கழக புதியகல்வி ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை பதிவினை மேற்கொள்ளாத மாணவர்கள் உடனடியாகத் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதி, பதிவினை மேற்கொள்ளாத மாணவர்களின் பெயர் விவரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பவேண்டியிருப்பதனாலும் - வர்த்தகம், முகாமைத்துவம், கலை ஆகிய பீட மாணவர்களுக்கான கற்கைநெறிகள் இம்மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாலும்- உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

நேற்று விவசாயபீட மாணவர்களிற்கான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. விஞ்ஞானபீட உயிரியல், பௌதிகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான பதிவுகள் கடந்தமாதம் முடிவடைந்த நிலையில் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கான பதிவுகள் நேற்று நடைபெற்றன. இவர்களுக்கான விரிவுரைகள் மார்ச் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

சட்டபீட மாணவர்களுக்கான பதிவுகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(8-12)

### நாளை

தை 27
புதன்கிழமை
09.02.2005
திதி : பிரதமை
பின்னிரவு 3.08 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 10.37 வரை
சுபநேரம் : 05.04 - 6.34
ராகுகாலம் : 12.34 - 2.04
(யாவும் பழைய நேரப்படி)

# வடக்கு-கிழக்கில் 61 பாடசாலைகளில் இவ்வாண்டு ஆங்கிலமொழிமூல கற்கை

## மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தகவல்

வலி.தெற்கு.பெப்.8

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள 61பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலமான கற்கை வகுப்புக்களை இவ்வருடம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

அரசினால் அமுல்செய்யப் பட்டுவரும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலமான பாடபோதனைகள் நடைபெற உள்ளன.

ஆறாம் வகுப்புத் தொடக்கம் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புவரை சகல பாடங்களையும் ஆங்கிலமொழி மூலம் பயிற்றுவிக்க இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 57 அரசினர் பாடசாலைகளிலும் நான்கு தனியார் பாடசாலைகளிலும் பரீட்சார்த்தமான முறையில் ஆங்கில மொழி மூலமான கற்கை நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயில உள்ள மாணவர்களுக்குத் தேவையான ஆங்கிலமொழி மூலமான பாடநூல்களை தேசிய கல்விநிறுவனத்தின் உதவியுடன் கல்வி வெளியீட்டுத்திணைக்களம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. அத்துடன் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட உள்ள ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சினால் விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட உள்ளன.

(10-152)

### உதயவாக்கு

நாம் உலகத்தைத் தவறாக உணர்ந்துகொண்டு அது நம்மை ஏமாற்றுகிறது என்று சொல்கிறோம்.

- தாகூர்.

## தேவை

அழகுசாதனப் பொருள்கள்
களஞ்சியப்படுத்துவதற்கு
யாழ். நகரிற்குள்
அறை வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
விளம்பர இல. 2499
மே/பா. உதயன்.
(41835)


# மயானத்தில் கொட்டகை

வலி.தெற்கு,பெப்.8

கல்லுண்டாய் பகுதியில் உள்ள மயானத்தில் நான்கு லட்சம் ரூபா செலவில் புதிய கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காலஞ்சென்ற 'டைகர்' கந்தசாமி என்பவரின் ஞாபகார்த்தமாக அவரது புதல்வர் கந்தசாமி ஜெயக்குமார் இக்கொட்டகையை அமைத்துக்கொடுத்துள்ளார்.

மயானத்துக்கு உள்ளே செல்லும் பாதையும் புனரமைக்கப்பட்டுள்ளது. கொட்டகைக்கான பெயர்ப்பலகையும் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இம்மயானத்தில் நிலவி வந்த கொட்டகை இல்லாத குறைபாடு இதன் மூலம் நீங்கியுள்ளது. (10-152)

## துரவுக்குள் வீழ்ந்த குழந்தை பலி

துரவுத் தண்ணீருக்குள் வீழ்ந்து ஒன்றரை வயதுப்பிள்ளை பலியாகியுள்ளது. நேற்றுமுனத்தினம் மாலை மிருசுவில் வடக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது. இன்று நடைபெறவுள்ள மற்றொரு பிள்ளையின் பிறந்த நாள் நிகழ்வுக்கான வேலைகளில் பெற்றோர் ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் இக்குழந்தை அடுத்த காணிக்குள்ளிருந்த துரவுத் தண்ணீருக்குள் தவறிவீழ்ந்து பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-117)


உ



## ஏழாலை சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா

காலம்: இன்று (08-02-2005) செவ்வாய்க்கிழமை
அபிஷேகம் பிற்பகல் 4.30 மணி
*அபிராமி அந்தாதி பாடல்கள் பாராயணம் பிற்பகல் 5.30 மணி*
பாடுபவர்:- பண்ணிசை வேந்தன்
நா.வி.மு.நவரத்தினம் புதல்வன்
திரு.பரந்தாமன் அவர்கள்
தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.
அனைவரும் வருக! அன்னை அருள்பெறுக!!

திருவிழா உபயகாரர்
ஸ்ரீ வாமதேவன் குடும்பத்தினர்.
(சி-40844)(46-11-18-24)


## திறப்பு விழா

தென்மராட்சி,பெப்.8

தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுச் செயலகம் இன்று காலை 10 மணிக்குச் சாவகச்சேரி கந்தையா வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

(10-117)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
1966
-
04
-
20



மறைவு
2004
-
12
-
26

### கந்தையா ரவிச்சந்திரன் (பார்த்தி)

அன்பின் திருவுருவாய்! பண்பின் பிறப்பிடமாய் – இருந்து
எம் குடும்பத்திற்கு நல்ல வழிகாட்டியாய்
எங்கள் குடும்ப ஒளிவிளக்கே!
சுனாமியில் நீங்கள் மடிந்து
நாற்பத்தைந்து நாள்கள் கடந்ததுவோ
ஆறவில்லை எம் நெஞ்சம்
உங்கள் ஆத்மா சாந்தி அவன் கழல்கள் சென்றடைவதாக!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
பிரிவினால் துயருறும்:
மனைவி, மகன், மகள்.
(41830) (21-11-18-24)



## விற்பனையாளர் தேவை

எமது புத்தகசாலைக்கு விற்பனையாளர்
தேவை (ஆண்கள் மட்டும்).
ஆர்வமுள்ளோர் 12.2.2005ஆம் திகதிக்கு
முன் தொடர்பு கொள்ளவும்.
நிர்வாகி,
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ்., வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 2222573
(சி-40847)



## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை
மடியில்
14
-
01
-
1987



அரன்
அடியில்
21
-
01
-
2004

### செல்வன் வர்ணகுலசிங்கம் வசீகரன்

முத்தென்ன வாய்த்த முகம் முழுமதியாய்த் தோணுதடா
மோகனப் புன்னகையோ மனத்தை வருடுதடா
மூத்தவனே வசீகரா! உனது நிழலுருவம் நித்தம்
நித்தம் கனவுதனில் நீள் கதைகள் சொல்லுதடா
இத்தனைக்கும் ஆண்டொன்று ஆனதோ இன்னும்
பலநூறும் ஆகலாம் மறந்திடுமோ எம் நெஞ்சம்!

கற்கோவளம்,
பருத்தித்துறை.
(சி-40848) (21-11-18-24)
- குடும்பத்தினர்.



## நெ 45 ஆம் நாள் நினைவஞ்சலி

ஞ் சை நெ ரு டு ம்



அமரர்களான
தம்பு மகாதேவன், மகாதேவன் இளையவள்,
தேவராசா மகாலட்சுமி, தேவராசா பொன்சிகா, தேவராசா தினேஸ்
(கள்ளப்பாடு - முல்லைத்தீவு)

உருத்தெழுந்து சுனாமியால்
ஒருசேர மறைந்தீர்கள்
இதயம் கலங்கிகின்றோம்
ஏற்றிடுவீர் எமது அஞ்சலிகள்
இயற்கையன்னை கடுஞ்சீற்றம்
எய்தியதேன் யாரறிவார்?
நயமிறை பண்புடையீர்
நமைப் பிரிந்து மறைந்தீர்கள்!
வருண பகவானே!
மகாசீற்றம்
தணிந்தருள்க – மறுபடியும்
கடுஞ்சீற்றம் கொள்ளாது
இருந்தருள்க!
தருமநெறி பிழைத்ததுவோ?
நகரென நாம் புகுந்தனவோ?
சகமதனை இரட்சிக்க
தயையருள்க தயாபரனே!

ஆதியாமலை, உடுப்பிட்டி.

உங்கள் பிரிவுத்துயரில் மூழ்கித் தவிக்கும்:
மகாதேவன் யோகராசா (விஜய்).

முக்கிய குறிப்பு: கடந்த 26.12.2004 ஞாயிறு நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தில் உயிரிழப்புகள் இடம்பெற்ற சோகச் செய்தி கேட்டு வந்து எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் இடம்பெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். – குடும்பத்தினர்.

(41815) (24-11-18)



## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
13
-
12
-
1954



உதிர்வு
26
-
12
-
2004

### அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்

(விற்பனையாளர்)

ஆழிப்பேரலையே உன் அனர்த்தத்தால்
வேலுப்பிள்ளை ஆறுமுகமும் மாண்டாரோ?
ஊழிப் பெருஞ்சேவை முப்பத்தைந்து ஆண்டுகள்
ஊழியஞ்செய்ததை மறக்கமுடியுமா?
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்.
பருத்தித்துறை.
(சி-40839) (24-11-18)
*தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.*


## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரதேசத்தில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்களை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (10-117)


உ
சிவமயம்

## 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சதாசிவம் வல்லிபுரநாதர்

(வல்லிபுரம்/பொன்னையா மாஸ்ரர்)
இளைப்பாறிய ஆசிரியர்

தோற்றம்
04-11-1914

மறைவு
10-01-2005

அன்புடனும், பண்புடனும் எமை வளர்த்து ஆளாக்கிய உங்களது
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 10.01.2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்துவந்து எம் வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதோடு, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து மலரஞ்சலி செலுத்தி, கண்ணீர்ப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும், தொலைபேசி, தந்தி, பத்திரிகை மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வகைகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், நாளை (09.02.2005) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நல்லூர், சட்டநாதர் கோவிலடி, திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையுடன் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*"சிவசக்திவாசா",*
நாகர்கோயில் தெற்கு,
நாகர் கோயில்.
(C/40846)(42-11-18-24)

வ.தில்லைநாதன், உதவிமுகாமையாளர், இலங்கைவங்கி, கொழும்புத்தலைமைக் காரியாலயம்.
வ.பத்மநாதன், மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்.
வ.கணேசநாதன், மாவட்டமுகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா. மற்றும் குடும்பத்தினரும்.



## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1970
-
05
-
31



உதிர்வு
2004
-
12
-
26



மலர்வு
2002
-
11
-
25

### பாலசுப்பிரமணியம் ரவீந்திரன் ரவீந்திரன் திபானி

(கற்கோவளம் பருத்தித்துறையைச் சொந்த முகவரியாகவும்
கள்ளப்பாடு முல்லைத்தீவைத் தற்காலிக முகவரியாகவும் கொண்டவர்)

பள்ளிப் பருவத்தில் இருந்து பயிற்சி அறை வரை
ஒன்றாகத் திரிந்த நண்பா!
உனது வாழ்வைப் பாதியில் நிறுத்தி உன்னுடன்
பச்சிளம் பாலகனையும் கூட்டிச்சென்றதேனோ?
என்றும் உனது அன்பை என்வாழ்நாள் முழுவதும் மறவேன்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.பரமநாதன்
கௌசி வாடகைப் பொருள்கள் சேவை,
யக்கோவளை வீதி, தும்பளை, பருத்தித்துறை.
(41829) (21-11-18-24)

# தலைவரின் படத்தை அகற்றுவதற்கு அதிரடிப்படைக்கு அதிகாரம் இல்லை

## அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தன் எச்சரிக்கை

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படத்தை அகற்றுவதற்கு சிறீலங்கா விசேட அதிரடிப் படையினருக்கு எவ்வித உரிமையும் இல்லை. படையினரின் இத்தகைய அடாவடித்தனங்கள் தொடருமானால் பாரிய பின்விளைவுகள் ஏற்படும் என விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தொடரும் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்கள் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி கல்முனையிலுள்ள நலன்புரி நிலையமொன்றில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த பெண் போராளியொருவா மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளனர். நேற்றும்முன்தினமும் இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

எமது தலைவரின் உருவப்படத்தை அகற்றி வீசியுள்ளார்கள். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இதனால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளார்கள். இதற்கு பின்னணியில் ஜே.வி.பி. இருக்கின்றது.

கடந்த வாரம் அழையாத விருந்தாளியாக பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ இந்தப் படத்தை அகற்றுவதற்கு 7 நாள்கள் கால அவகாசம் வழங்கி எச்சரிக்கை விடுத்துச்சென்றார்.

இப்படியான அடாவடித்தனங்களும் மனிதாபிமானம் அற்ற செயல்களும் மேலும் தொடருமானால் அதனால் ஏற்படும் பாரிய விளைவுகளை அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும். அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8)

## சனசமூக நிலையத்துக்கு புதிய கணக்கு

வலி.தெற்கு, பெப்.8

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்திற்கான புதிய கணக்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இந்த வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கு வசதியாக சனசமூக நிலையத் தலைவர். செயலாளர், பொருளாளர் ஆகியோர் பொதுக்கூட்ட அறிக்கையின் பிரதிகளுடன் மானிப்பாய் பிரதேச சபைத்திட்டமிடல் பிரிவுக்கு வருமாறு உள்ளூராட்சி உதவியாளர் செரமேஸ் கேட்டுள்ளார். (8-202)

## வெள்ளவாய்க்கால்களின் அணைகளை புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை

நவாலி,பெப்.8

நவாலி சங்கையான் விவ்சாய வெள்ள வாய்க்கால்களின் அணைக்கட்டுக்களைப் புனரமைப்புச் செய்துதருமாறு நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்டவர்களை மகஜர் மூலம் கோரியுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது சங்கத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள வாய்க்கால்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமலும், நீண்ட காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட அணைகள் சேதமடைந்துமுள்ளன.

இதனால் மழை காலத்தில் வெள்ளம் ஓடிச்செல்ல முடியாமல் இப்பகுதி மக்களின் வீட்டு வளவுகளிலும் வீதிகளிலும் தேங்கி நிற்பதுடன் போக்குவரத்தும் தடைப்படுகின்றது.

எனவே 2005ஆம் ஆண்டு துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இவ்வணைக்கட்டு புனரமைப்புச் செய்து தருவதற்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

மகஜரின் பிரதிகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நீர்ப்பாசன திணைக்கள பிரதம பொறியியலாளர், கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர், செயலாளர், வலி தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (8-100)

# பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் அன்பளிப்பு

## கண்டி லயன்ஸ் கழகம் வழங்கியது

தென்மராட்சி,பெப்.8

கண்டி, செங்கடகல லயன்ஸ் கழகத்தினர் (306 சி) சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட 500இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும், புத்தகப்பைகளையும் வழங்கினார்கள்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் செங்கடகல லயன்ஸ் கழகத்தினர் கடந்த மாதம் 31 ஆம் திகதி, இம்மாதம் முதலாம் திகதி ஆகிய தினங்களில் இவற்றினை வழங்கினார்கள்.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், வெற்றிலைக்கேணி அரச தமிழ் கலவன் பாடசாலை, ஆழியவளை றோமன் கத்தோலிக்க தமிழ கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, சாவகச்சேரி, கச்சாய் வீதி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் தரம் 1 தொடக்கம் தரம் 6 வரையான மாணவர்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

கண்டி 306சி லயன்ஸ் கழக வலயத தலைவா லயன் டிலீன் குணசேகர, செங்கடகல லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஜலீல், கழக திட்டத் தலைவர் லயன் பேராசிரியர் சமரசிங்க ஆகியோர் இப் பொருள்களை வழங்கினார்கள்.

ஜனவரி 31ஆம் திகதி வடமராட்சி பகுதியில் சுனாமியால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் தரம் 1தொடக்கம் தரம் 6வரை கல்வி பயிலும் 210 மாணவர்களுக்கு கறறல் உபகரணங்களையும், புத்தகப் பைகளையும் லயன்ஸ் கழகத்தினர் வழங்கினர்.

இம்மாதம் முதலாம் திகதி வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த வெற்றிலைக்கேணி அ.த.க. பாடசாலை, ஆழியவளை றோ.க.த.க பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றின் தரம்1 தொடக்கம் தரம்5 வரையான மாணவ்களுக்கு வழங்கவென 250 புத்தகபைகளையும், கற்றல் உபகரணங்களையும் தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதியிடமும்-

சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க.பாடசாலை மாணவர்களுக்கான 60 பொதிகளை சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்திரு.எஸ்.ஜே.வசந்தகுமார் அடிகளிடமும் இக்குழுவினர் கையளித்தனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம், வலயத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் 306 பி மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் சு.சி.அருளானந்தம், ஆகியோர் இக்குழுவினருடன் சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் காண்பித்தனர். (8-117)



கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுடன் லயன்ஸ் கழகத்தினர்...

# யாழ்.நகர் கிழக்கு சமுர்த்திவங்கி நேற்றுமுன்தினம் திறந்துவைப்பு

குருநகர்,பெப்.8

யாழ்.பிரதேச செயலகத்தில் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி அலுவலகம் நேற்று கடந்த 6ஆம் திகதி யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியால் திறந்துவைக்கப்பட்டது.

யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் காலை 11.00மணியாவில் நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி அலுவலகத்தின் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

இத் திறப்பு விழா நிகழ்வைத் தொடர்ந்து யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. யாழ்.மரியன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தை வண.பிதா க.இரவிராஜ் அடிகளார் ஆசியுரையையும், யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன் வரவேற்புரையையும், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி. மகேஸ்வரகுமார் சிறப்புரையையும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலக வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், யாழ். பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டார்கள்.(8-51)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 80 பாடசாலைகளை நோர்வேயின் அகதிகள் அமைப்பு புனரமைக்கும்

திருகோணமலை,பெப்.8

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் 80 பாடசாலைகளைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு நோர்வே நாட்டின் அகதிகளுக்கான நிதியம் முன்வந்துள்ளது.

புனரமைக்கப்படவுள்ள பாடசாலைகளில் 65 பாடசாலை வடக்கு - கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை நோர்வே நாட்டின் அகதிகளுக்கான நிதியப் பிரதிநிதி திருமதி வென்டே செண்டல் அசட் திருகோணமலையில் வைத்துத் தெரிவித்தார்.

திருகோணமலைக்கான விஜயமொன்றை மேற்கொண்ட இவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட திருகோணமலைப் பாடசாலைகளைப் பார்வையிட்டார்.

மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிகளுக்குச்சென்று அங்கும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை அவர் பார்வையிட்டார்.

திருகோணமலையில் வைத்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும் மகளையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாடசாலைகளைப் பார்வையிட்டு இது தொடர்பாக உடனடியாக இலங்கை அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர்தெரிவித்தார்.

இதேவேளை-

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள ஒரு சில பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து நோர்வேயில் உள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகள் அவற்றைப் பராமரிக்கவும் ஒத்துழைப்பை வழங்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றுடன் நோர்வே ஆசிரியர் சங்கம், அச்சக உரிமையாளர் சங்கம், நோர்வே பாடசாலை மாணவர் அமைப்புகள் போன்றவையும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் உதவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் வென்டே தெரிவித்தார். (8-12)

## சிகை அலங்கரிப்பாளர் சங்கத்துக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,பெப்.8

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்திற்குத் தேவையான தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 25ஆயிரம் ரூபா நிதியை யாழ மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.(8-173-202)

## பரீட்சைக்கு தோற்றுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து இவ்வருடம் 2 ஆவது தடவையாக ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் தவணைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அதிபர் எஸ்.புண்ணியசீலன் கேட்டுள்ளார்.(8-202)

## அபிராமிப்பட்டர் விழா

வடமராட்சி,பெப்.8

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவதுடன் அபிராமி அந்தாதியும் பாடப்படும். (8-173)

## வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டுப்பாடு

தென்மராட்சி,பெப்.8

சாவகச்சேரி நகர்ப்பகுதி வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்துவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்றுவிட்டு ஒருநாள் ஒரு பக்கத்தில் வாகனங்களை நிறுத்துவதற்குரிய அறிவுறுத்தல் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

நகரின் இரு வீதியோரங்களிலும் தினமும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் வாகனப் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதுடன் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் ஒருபக்கம் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி தொடககம் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.(8-117)

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிதியுதவி

வடமராட்சி கிழக்கு,பெப்.8

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமக்குரிய உடைகளை வாங்குவதற்காக மூவாயிரத்து ஐந்நூறு ரூபா வழங்கப்படுகின்றது.

'யுனிசெவ்' நிறுவனமே பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்நிதியினை வழங்க முன்வந்துள்ளது. (8-182)

## ஓட்டோ கையளிப்பு

நாவலி,பெப்.8

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு புதிய ஓட்டோ ஒன்றை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கடந்த 27ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக அதிபர் சூ.ஜெயவீரசிங்கத்திடம் கையளித்தார். (8-100)

## செயலமர்வு

தென்மராட்சி,பெப்.8

ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைததிட்டம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு பரீட்சைத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அபிவிருததிக்கு அல்லது பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.எம்.விஜயசிறி கேட்டுள்ளார். (8-117-202)

# கடலலையில் சங்கமமான எம் உறவுகளின் 45 ஆவது நினைவு நாள்

சுவாமியின் படைப்பு




21 02 1962 — 10 10 1988

ஜீவநாதன் டைனேஸ்வரி
(ஆங்கில ஆசிரியை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

ஜீவநாதன் நிரோஜன்
(யாழ்/பரியோவான் கல்லூரி மாணவன் A/L-2007)

சுவாமியின் படைப்பு




11 02 1965 — 31 10 1924

அருள்நேசன் மஞ்சுளா
C-9 மிராஜ் வீடமைப்புத் திட்டம், சொய்சாபுர, மொறட்டுவ)

கந்தையா ஆதைப்பிள்ளை
C-9 மிராஜ் வீடமைப்புத் திட்டம், சொய்சாபுர, மொறட்டுவ)

சுனாமியின் பறிப்பு
26-12-2004

"சுனாமிப் பேரலை ஓய்ந்து விட்டது - எம்
கண்ணீர் அலையோ இன்னும் ஓயவில்லை"
உங்கள் ஆத்மசாந்திக்காகத் தினமும்
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

க.ஆ. ஜீவநாதன்
இல.10, வைரவர் கோவில் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

நல்லூர்,பெப்.8

நெடுந்தீவுப் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் நடைபெறும்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம். பற்றிக் டிறஞ்சன் தலைமையில் மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறும் இப்போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வு 13ஆம திகதி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். (த-111)

☆ ☆ ☆

நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை கல்லூரி முதலவர் அருட்செல்வி இக்னேசியா சூசைப்பிள்ளை தலைமை கல்லூரி விளையாடடரங்கில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் சுவாம்பிள்ளை ஷென்றியும் கௌரவவிருந்தினராக யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் ஜே.ரூபசிங்கம, நெடுந்தீவு பங்குத்தந்தை வண.பிதா ஜெபநேசரட்ணம், நெடுந்தீவு தென்னிந்தியச் திருச்சபைப் போதகர் வண. ஆயர்.ஜோன் செல்வம் பல நோ.கூ. சங்கத் தலைவர் எஸ். கோபாலசிங்கம், நெடுநதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அரசரத்தினம், நெடுந்தீவு பிரதேச விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் அசோகன், நெடுந்தீவு பிரதேசசபைச் செயலர் பொ.தில்லைநாதன் ஆி யோரும் கலந்து கொள்வார்கள்.(த.111)

# 6 ஆம் ஆண்டு நெஞ்சகலாநினைவலைகள்



தவப்பேறு 31.03.1969
சிவப்பேறு 08.02.1999

அமரர்
கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.A F)
(உப அதிபர்-வவு./வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்)

ஆறு ஆண்டுகள் ஆனாலும்
ஆறிடுமா எம்மனது?

ஆத்ம சாந்திக்காக இறைஞ்சும்:
- குடும்பத்தினர்.

கரவெட்டி மேற்கு.
T.P.:060-2213076

41765

# 45ஆம் நாள் நினைவு நாள்



தாயின் மடியில்
01.10.1987

அலையின் பிடியில்
26.12.2004

அராயூரில் தவழ்ந்த - நீ
திருமலையில் உற்றாரை
தேடிப்போய்
பாவம் ஏதும் அறியாப்
பிள்ளை வைஷ்ணவே!
பாரினில் பிரணமித்த கொடூர
ஆழிப் பேரலையினுள்
அள்ளுண்டு போனாயே!
நிலை தடுமாறி நிம்மதி
இழந்து தவிக்கின்றோம்
நாம் இன்று.

செல்வி
குணசேகரம் வைஷ்ணவி


எமது துயரில் பங்குகொண்டு ஆறுதல் படுத்திய உள்ளங்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இழந்து தவிக்கும்:
அப்பா-இ.குணசேகரம் (ஜீவன்),
அம்மா-கு.ரதி, தங்கை-கு.சாம்பவி,
தம்பி-கு.ஆதித்யன்.

இல.1. முதலாம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.

(C/40818)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் செல்லத்துரை சத்திவேல் (சத்தி)

மலர்வு: 1972-07-31
உதிர்வு: 2004-12-26

வருவீர் வருவீர் என காத்திருந்தோம்
வரவில்லை ஏனோ ~ சத்தி?
நாற்பத்தைந்து நாளுமாயிற்றோ முழுநிலவு மறைந்து?
இப்போதும் எங்கள் உள்ளம் தடுமாறுகிறதே!
காலமெல்லாம் வாழ்வோம் என்று
கண்டிருந்த கனவுகளைக் கலைத்து விட்டு
கணப் பொழுதில் வந்த கடல் அலையோ
உங்களை பறித்துச் சென்றான்?

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

2004-12-26 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (08-02-2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நாகலிங்க முதலியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(41749)(46-14-45-26)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, குடும்பத்தினர்.

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 2005.02.15 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலை:**

1. அலுவலர் (ஆண்கள்)
2. உதவி அலுவலர் (ஆண்கள்)
3. கணினித் தரவுப்பதியுநர் (இருபாலாரும்)

**கல்வித்தகைமை:**

பணிநிலை 01. க.பொ.த. (உ/த.) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை 02. க.பொ.த. (சா/த.) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை 0? க.பொ.த. (சா/த.) பரீட்சையில் தோற்றியிருப்பதுடன் எம்.எஸ்.ஒபிஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:**

2005.02.23
காலை 10.00 மணிக்கு

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:**

மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

ஆளுகை, மனிதவள மேம்பாட்டுப் பகுதி.

(சி-40817)
(24-14-16)

# தமிழர்களை அகதிமுகாம் வாழ்க்கை விடுவதாயில்லை; சொந்த இடத்தில் மீளக்குடியமர்வது மிகவும் அவசியம்

★ சுண்டலோ, சம்பலோ சாப்பிட்டாலும் நிம்மதி தேவை!
★ அடுத்த சுனாமிக்கும் நாம்தான் பலியா?
★ எந்நேரமும் விழித்திருக்க முடியுமா?
★ இளம் பெண்களின் பாதுகாப்பு?
★ மதுபோதையர்களின் தொல்லை?

இவை கல்முனை வாழ் அகதிகளின் உணர்வலைகள்.

"1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதியானேன். பின்பு 1990 இல் மீண்டும் இனக்கலவரத்தால் அகதியானேன். இன்று 2004 இல் சுனாமியால் அனைத்தையும் இழந்து அகதியானேன். இப்படி தமிழ் மக்களை இந்த அகதிமுகாம் வாழ்க்கை விடுவதாயில்லை."

- இவ்வாறு கல்முனை, கார் மேல் பாத்திமாக்கல்லூரி அகதிமுகாமில் காலங்கடத்திவரும் ம.மணிமேகலை (வயது 38) என்ற குடும்பப் பெண்மணி விவரித்தார்.

அமபாறை மாவட்டத்தில் கல்முனை தமிழ்ப் பிரதேசம் ஆயிரத்து 721 தமிழ் மக்களை சுனாமியில் பறிகொடுத்தது. இத்தகவல் ஆரம்பத்தில் ஊடகங்களில் வெளிவரத் தாமதித்தது. இருப்பினும இன்று சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு முகாமிலுள்ள மக்களின் உணர்வலைகளைப் பகிர்வதன் மூலம அவர்களை ஓரளவிற்கு வெளியுலகிற்குக் காட்டலாமென விளைகிறோம்.

குணவதி (வயது 32) கூறுகையில்:-

"அகதிமுகாம் வாழ்க்கை என்பது நாம் விருமபி ஏற்றுக்கொண்டதல்ல. சுனாமியால் இங்கு வர நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தொடர்ந்து இங்கு வாழ்வதென்பது முடியாத காரியம். எமக்கு இருகக நிரந்தரமான இடம்தேவை. அதற்கு மற்றவர்கள் வழிகாட்ட வேண்டும்."

**கற்பதில் இடைஞ்சல்**

எனது மகள் தரம் 10 படிக்கிறாள். இங்கு முகாமில் ஒரே இரைச்சல் பிள்ளைகளால் படிகக முடிவதில்லை. கடல் அடித்த பிறகு படிப்பே இல்லை. பள்ளிக்கும் போகவில்லை. முகாமில் சத்தம் கூடினால் 'கடல் வருகுது' என்று கூறிக்கொண்டு வெளியே ஓடுகிறார்கள். புத்தகப்பை உடுப்புகள் வழங்கினாலும்கூட பாடசாலை செல்ல எமது பிள்ளைகளுக்கு விருபபமில்லை. இதனால் அவர்கள் நடைப்பிணமாக அலைகிறார்கள்.

இரவானால் குடிப்பழக்கமுள்ளோரால் தொநதரவு, முகாமில் குளிப்பது, உடுப்புக் கழுவுவது எல்லாம் சிரமம் தான். எமக்கு சமையல் உபகரணம் வாங்க இரண்டாயிரத்து 500 ரூபா தரவில்லை. ஆக 5 ஆயிரம் ரூபா மட்டும்தான் தந்தார்கள். கடையில் சாமான் வாங்கிய கடன் நாலாயிரத்து 500 ரூபாவைக் கொடுத்தோம். இப்போது ஐந்து சதமும் இல்லாமல் உள்ளோம்.

பருப்புமட்டும் குவிகிறது. இனிமேல், பருப்புத் தரவேண்டாம். எம்மை மீண்டும் எமது வளங்கொழிக்கும் காரைதீவு மண்ணில் குடியேற்றுங்கள். இயற்கைக்குப் பயந்து எங்களை அயலூருக்குக் கொண்டு போகவேண்டாம். எதிர்காலம் எப்படிப்போகும்? என்றறியாது தவிக்கின்றோம்" என்றார்.

அதே முகாமில் எஸ்.வசந்தாதேவி (வயது 38) என்ற குடும்பப் பெண்மணி கூறுகையில்:

"நேற்று ஆண்கள் பாடசாலைக்குப் போன எனது மகள் கடல்வருகிறது என்று சொல்லி ஓடிவந்தாள். பதைபதைத்துப் போனேன். தினமும் வதந்தியால் செத்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே, உயிரிழந்து, உடைமையிழந்து வந்த எமக்கு இரண்டாயிரத்து 500 ரூபா தரவில்லை.

பாதிக்கப்படாத பல செல்வந்தர்களும் ஐயாயிரம் ரூபா பெற்றிருக்கிறார்கள். தண்ணியே காலில் படாத பலர் எந்த மனச்சாட்சியோடு இந்த ஐயாயிரத்தைப் பெறுகிறார்களோ தெரியாது.

மணணெண்ணெய் அடுப்புத் தந்தார்கள் ஆனால், அதற்கான மண்எண்ணெயைத் தரவில்லை. தினமும் தேநீர் வைக்கவும் சோறு, கறி சமைககவும் ஒரு போத்தல் மண்எண்ணெய் தேவை. ஒரு போத்தல் மண்எண்ணெய் ரூபா 26 ஆகும். இதற்கு யாரிடம் செல்வது?

**பொங்கல் செய்ய மட்டும் உதவும் கோறா அரிசி**

தருகின்ற அரிசியில் பெரும்பாலும் ஊறல், கோறா ஆகிய பச்சை அரிசிகளே வருகின்றன. அவற்றைக் கொண்டு இடியப்பம், புட்டு அவிக்க முடியாது. பொங்க மட்டும் முடியும்.

சுனாமி மீண்டும் வருகிறதென்று எம்முடன் ஓடிய பலர் இன்னும் அம்பாறையிலிருந்து மீளவில்லை. பயப்பட்டு பயப்பட்டு வாழ்க்கையின் விளிம்பில் உள்ளோம். எமக்கு ஊரைவிட்டு வெளியே போகவிருப்பமில்லை. எம்மை வெளியே குடியேற்ற வேண்டாம். காரைதீவு எமது தாய் மண், அந்த மண்ணைப் போல் எந்த மண்ணும் வராது" - என்றார்.

பாண்டிருப்பு மகாவித்தியாலய அகதிமுகாமில் வாழும் எஸ்.பேரின்பம் கூறுகையில்:-

"எனது வீடு 200மீற்றர் பரப்புக்குள் வருகிறது. நிவாரணம் இங்கு இருந்துவிட்டுக் கிடைக்கிறது. பாதிக்கப்படாதவர்களைவிட பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணம் கிடைப்பது குறைவாகவிருக்கிறது.

பாடசாலை தேவைதான். எனவே, எமக்கு ஓர் இல்லிடத்தைக் காட்டிவிட்டு எம்மை அனுப்புங்கள், போகிறோம். அதற்காக வெளியே - வெளியூர் போகத் தயாரில்லை. பாண்டிருப்பிலே வயற்பிரதேசத்தை மூடியாவது கட்டுங்கள். குடியேற்றுங்கள். எதிர்கால சந்ததியாவது வளம்பெறட்டும் - என்றார்.

அகதிமுகாமில் வாழ யாருக்குத்தான் விரும்பம்? என்ன செய்வது சுனாமியால் வந்த விதியை நோவதைத் தவிர வேறு வழியில்லை. இருப்பினும், எதிர்காலம் உண்டு என்பதில் எம்மவர் நம்பிக்கை கொள்ளவேண்டும். *

## எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையில் காலத்தைக் கடத்தும் இளையோர்

காரைதீவிருந்து
**வி.ரி.சகாதேவராஜா**

# பாதிக்கப்பட்ட மீனவருக்கு உதவி வழங்குங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் ரணில் கோரிக்கை

கொழும்பு,பெப்.8

மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு உதவுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பெல்ஜியம் பிரஸ்லஸ் நகரில் கடந்த 3 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் பெரோ வோல்ரினரை எதிர்க்கட்சித் தலைவர் சந்தித்து உரையாடினார். இதன்போது ஆழிப பேரலை அனர்த்தத்தில் இலங்கையில் கரையோரப் பகுதிகளில் மீனவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் அறுபது வீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகமானோர் மீன்பிடிப படகுகளை இழந்துள்ளனர். எனவே நடுத்தர ட்றோலர்களையும் சிறிய மீன்பிடி படகுகளையும் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேணடும் - எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உரிய வகையில் நிவாரணப் பொருள்கள் சென்றடைய வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி எதிர்க்கட்சி தலைவரிடம் தெரிவித்தார்.

இநதச் சந்திப்பின்போது முன்னாள் அமைசசர் மிலிந்த மொறகொட, ஐ.நாவின் முன்னாள் இலங்கை பிரதிநிதி சாலி மகேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-க)

## அனர்த்தம் குறித்து 2 நாள்கள் விவாதம்

கொழும்பு,பெப்.8

ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து நாடாளுமன்றில் இரண்டுநாள் விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் நாளை கூடும்போது, இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தையொட்டிய மூன்று நிதிச் சட்டமூலங்களின் மீதான விவாதமும் இடம்பெறும்.

நாளையும் நாளை மறுதினமும் ஆழிப்பேரலை அனர்த்தம் மற்றும் அதன் பின்னரான நிலைமை குறித்து இரண்டு நாள் விவாதம் நடைபெறவுள்ளதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-10)

## நூற்றுக்கும் அதிகமான கிராமசேவையாளர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு,பெப்.8

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மோசடி மற்றும் நிவாரணப் பணிகளில் திருப்தியின்மை ஆகிய காரணங்களுக்காக நாட்டின் பல பாகங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம சேவை அலுவலர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என சமூக சேவைகள் பிரதியமைச்சர் எஸ்.டி.சந்திரசேன தெரிவித்தார்.

இதனைத் தவிர நிவாரணப் பணிகளில் திறமையற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட பிரதேச செயலாளர்கள் 12 பேரில் சிலர் வேறு பதவிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மற்றும் சில பிரிவுகளில் மேலதிக பிரதேச செயலாளர்கள் கடமைக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

ஒழுக்காற்று நடவடிககைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள கிராம சேவையாளர்கள் சிலர் மோசடிகளுடன் தொடர்புடையமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள் என்ற தகவலையும் அமைச்சர் வெளியிட்டுள்ளார். (எ-க)



பருத்தித்துறை பிரதேச செயலகம் அண்மையில் நடத்திய முதியோர் கௌரவிப்பு விழாவில் சமூகசேவைகள் அலுவலர் என்.இராசலிங்கம் முதியோர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

## ரயில் கட்டணங்களை உயர்த்த அரசு முடிவு!

கொழும்பு,பெப்.8

ரயில் கட்டணங்களை உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. அடுத்த இரண்டு மாதங்களுள் கட்டண அதிகரிப்பு நடைமுறையில் வரும் என்று போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார். கட்டண உயர்வை நடைமுறைக்குக் கொண்டு வராதுவிட்டால் ரயில் சேவையை தொடர்ந்து நடத்தமுடியாது மோசமான நிதி நிலைமை ஏற்படும் என்று அவா கூறினார்.

தற்போது பயணிகளிடமிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு 31 சதத்தையே ரயில்வேத் திணைக்களம் அறவிட்டு வருகின்றது. இதனால் ரயில்வேத் திணைக்களத்திற்கு பல கோடி ரூபா இழப்பீடு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 200 கோடி ரூபா ரயில்வேத் திணைக்களத்திற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-க)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோர் அரசின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வடமராட்சிப் பகுதியில் சுவரொட்டிகள்

வடமராட்சி, பெப்.8

சுனாமி அனர்த்தத்தால் விபத்துக்குள்ளானவர்களின் உறவினர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசு வழங்கிவருகின்ற உதவிகளை, பாதிக்கப்பட்டோரையும விபத்துக்குளளானோரின் உறவினர்களையும் தாமதமின்றிப் பெற்றுக்கொளளுமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணை யாளரால் வெளியிடப்பட்டுள்ள தமிழ், ஆங்கில மொழியிலான சுவரொட்டிகள் வடமராட்சிக் கரையோரப் பகுதியிலும், யாழ்.நகரப் பகுதியிலும் ஒட்டப்பட்டுள்ளன.

மரணம் அடைந்த ஒருவருக்கு 15ஆயிரம் ரூபா வீதம் அவரது குடும்பத்தினருக்குக் கொடுபனவு வழங்கப்பட்டுவருகின்றது. அத்தியாவசிய தேவைகளுக்காக உணவு, உடை, கூடாரம் போன்றவற்றை அரசுவழங்கிவருகிறது. கூப்பன் முத்திரையாக 175 ரூபாவும், உலர் உணவு நிவாரணமாக 200 ரூபாவும் சமுர்த்தி வலைப்பின்னல் மூலம் வாரந்தோறும் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் மீள் குடியமர்வுக்கென மக்கள் வங்கிக்கிளைகள் மூலம் குடும்பம் ஒன்றுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பெற்றுக்கொள்ளாத பாதிக்கப்பட்டோர் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், கிராமசேவையாளர் இவர்களில் எவரேனும் ஒருவருடன் தொடர்புகொண்டு இந் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனா. பாதிக்கப்பட்டவர்கள் எவருக்கும் இந் நிவாரணம் கிடைக்கவில்லையானால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்புகொள்ளுமாறு முகவரி, தொலைபேசி, இலக்கங்கள், ஈமெயில் முகவரி என்பன அப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-173)

## ஈ.என்.டி.எல்.எவ்வின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,பெப்.8

ஈ.என்.டி.எல்.எவ்.அமைப்பின் முன்னாள் உறுப்பினரான அக்காச்சி என்பவர் மூதூர் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் கருணா குழு என்று கூறிக்கொண்டு உளவாளியாகச் செயற்பட்டு வந்தார் என்றும், ஓட்டோ ஓட்டுபவர் போல இயங்கி, அவரது படைகளுக்கு கிழக்கு மாகாணத் தகவல்களை திரட்டி வழங்கி வந்தார் என்றும் - இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேறிய போது அப்படைகளோடு வெளியேறி ஓரிஸாவில் தங்கியிருந்த அவர், அண்மையில் தான் கிழக்கு மாகாணத்திற்குத் திரும்பியிருந்தார் எனக் கூறப்பட்டது. (க-8)

# நெஞ்சை விட்டகலாத 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
## கந்தப்பு கிருஷ்ணபிள்ளை

(விஷகடி வைத்தியர்)

அன்னை மடியில்
**05.01.1924**

அலைகளின் பிடியில்
**26.12.2004**

*பாசச் சுமையோடு பறந்து சென்ற எம் தெய்வமே!*
*எமமைப் பாதி வழியில் பரிதவிக்கவிட்டதேனோ?*
*கோடி தவமிருந்தாலும் தேடமுடியுமோ உங்களைப்போல்*
*ஏனிந்தக் கதியெமக்கு எப்படி நாம் தாங்கிடுவோம்?*

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் வழி காட்டியாகவும் திகழ்ந்து அன்போடும் பாசத்தோடும் அரவணைத்துச் சுனாமியின் கோரப்பிடியில் சிக்கி அகால மரணமாகிய எமது பாசமிகு தந்தையின் திடீர் மறைவால் நாம் தவித்தபோது பல வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் உடன் வந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் இறுதியாத்திரையில் கலந்துகொண்டவர்களுக்கும் இன்னும் பலப்பல வழிகளில் உதவி புரிந்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உணர்வு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



அன்னை மடியில்
**08.01.1980**

அலைகளின் பிடியில்
**26.12.2004**

*எம் கண்மணியே!*
*உன் கானங்கள் கேட்டு எம் காது குளிராதா?*
*உன் நயன நடையை இனி எப்போது பார்ப்போம்?*
*உன் துடுக்கான பேச்சை இனி எப்பிறப்பில் கேட்போமம்மா?*

சுனாமியின் கோரப்பிடியில் சிக்கி அகால மரணமாகிய எமது அன்பு மகளின் திடீர்மறைவால் நாம் தவித்தபோது பல வழிகளில் உதவிசெய்தோர்க்கும் உடன் வந்து ஆறுதல் கூறியோர்க்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் மலர்வளையங்கள் வைத்தவர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்குபற்றியவர்களுக்கும் இறுதிப்பிரார்த்தனையில் ஈடுபட்ட பங்குத்தந்தை, அருட்சகோதரிகளுக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உணர்வு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணாமார்,
குடும்பத்தினர்.

அமரர்
## தனுஷியா கொன்சன்ரைன்

(யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியை,
யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய உள்ளகப்பயிற்சி ஆசிரியை)

தற்காலிக முகவரி - 'மனோ இல்லம்', அரசடி லேன்,
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை, பருத்தித்துறை. T.P.: 0712373378

நிரந்தர முகவரி
மாமுனை, செம்பியன்பற்று.

(41834)

# வேலையாள்களைத் தேடிக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கும் விவசாயிகள்




விவசாயத்தைத் தமது முழுநேரத் தொழிலாக மேற்கொண்டுவரும் விவசாயிகள் அதனைச் சரிவர மேற்கொள்ளமுடியாதவாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து எதிர்நீச்சல் போடவேண்டியுள்ளது. நாளுக்கு நாள் தொழிலாளர்களுடைய கூலிகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. தோட்ட மற்றும் வயல் வேலைகளுக்குத் தொழிலாளர்களை தேடிக் கொள்வதிலும் சிரம நிலை காணப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் போதிய சந்தை வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதனால் அவற்றின் விலைகளும் குறைந்துவிடுகின்றன. வயல் நிலங்களில் புல் போன்ற களைகளின் தாக்கமும் அதிகரித்தே காணப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் கிருமி நாசினிகளின் பாவனை அறிமுகமாவதற்கு முன்னர் தோட்டங்களிலும் வயல் நிலங்களிலும் மனித வலுக்களைக் கொண்டு புற்களையும் களைகளையும் கைகளால் கிண்டி எடுத்து அல்லது வெள்ளத்தில் நின்று கைகளால் பிடுங்கி எடுத்து அவற்றை அழித்து வந்தனர். ஆனால் இன்று அத்தகைய நிலையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர்.

ஒரு சில தசாப்த காலங்களுக்கு முன்னர் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் என்பன களைகளை அழிப்பதற்கும் அதிக விளைச்சலைப் பெறுவதற்கும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்தலாம் எனக் கூறி விவசாயிகளுக்கு அவற்றை அறிமுகம் செய்துவைத்தன. புல்லுகளை ஒழிக்கலாம், புழுக்களை அழிக்கலாம். கிருமிநாசினிகளைப் பயன்படுத்துங்கள் என வேகமாகப் பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால் அன்றைய விவசாயிகள் அவர்களின் இப்பிரசாரங்களையும் ஆலோசனைகளையும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. மருந்து வகைகளைத் தோட்டத்தில் பாவித்தால் அவை பயிர்களைப் பழுதடையச் செய்துவிடும் என நம்பினார்கள். நாங்கள் எப்படியும் இரண்டு மூன்று கிழமைகளுக்குள் நெல் வயலில் வளரும் புல்லுகளைக் கிண்டி எடுத்து அழித்து






விடுவோம். கிண்டும்போது நிலமும் சொகுசு படுகின்றது. எனவே, புல் போன்ற களைகளுக்கு கிருமிநாசினி மருந்துகள் விசிறத் தேவையில்லை எனக் கூறி களைகளைக் கிண்டி எடுத்தபின் பசளையைப் போட்டுப் பயிரை வளர்த்தனர். அவர்களின் இச்செயற்பாட்டில் நியாயம் இருக்கத்தான் செய்தது.

இரண்டாம் மூன்றாம் கிழமைகளில் களைகளைக் கிண்டி எடுக்கும்போது நில மண் சொகுசுபடுகின்றது. புல்லை எடுத்துவிட்டு பசளையைப் போடும்போது புல் இல்லாமல் போகும். பசளையும் பிரயோசனப்படும். மரக்கறிகள், நெற்பயிர்கள் செழிப்பாக வளர்ந்து அதிகரித்த விளைவைத் தரும்.

ஆனால், இன்று முன்னைய காலங்களில் நிலவிய சூழ்நிலை இருக்கவில்லை. தோட்ட வயல் நிலங்களில் களைகளைக் கிண்டி எடுத்து அழிப்பதற்குப் போதிய ஆள்வலு கிடைப்பதில்லை. கூலி ஆள்களின் செயற்பாடுகளும் திருப்தி தருவனவாகவும் அமையவில்லை. அவர்கள் கேட்கும் உயர்ந்த கூலியைக் கொடுத்து விவசாயிகளால் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலையும் உள்ளது. இதனால் பல விவசாயிகள் விசாயத் தொழிலைக் கைவிட்டு வேறு வருமானம் தரக்கூடிய வேலைவாய்ப்புகளை நாடமுற்பட்டு வருகின்றனர்.

எனவே விவசாயத் திணைக்களம் கமநல சேவைகள் திணைக்களம் போன்றவை முன்னர் வலியுறுத்தி வந்த புல் மருந்தை (களை கொல்லி) இன்று விவசாயிகள் பலர் பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

### புல்லுக்கு மருந்து அடித்தல்

நெற் பயிர்ச்செய்கையின் போது வயலில் வளரும் புல்லுக்கு எந்த நேரத்தில், எந்த அளவில் எப்படிப் புல் மருந்தை அடித்தால் அதிக பிரயோசனமாக இருக்கும் என்பதை விவசாயிகள் பலரும் அறிந்துகொண்டு செயற்படுவது பயனுள்ளதாக அமையும்.

விவசாயிகளுக்குப் புல்லுக்கான மருந்து அடிக்கத் தெரியாமல் இல்லை. எற்கனவே பலர் அதனை அடித்து அனுபவப்பட்டவர்கள் தான் இருப்பினும், மருந்து அடிப்பதில் ஒரு தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தினால் மேலும் கூடிய பலனைப் பெறலாம் என்பதே எமது கருத்து.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வயல் மற்றும் தோட்ட மேட்டு நிலங்களில் அநேகமான விவசாயிகள் இன்று கோல்(Goal) என்ற கிருமிநாசினியையே பயன்படுத்துகின்றனர். இக் கிருமிநாசினி சில இடங்களில் களைகளைக் கட்டுப்படுத்துகிறது. சில இடங்களில் கட்டுப்படுத்தும் தன்மை குறைவாக உள்ளது. 'கோல்' மருந்து சரியான முறையில் செயற்பட வேண்டுமானால் அதனை எப்படி, எப்பொழுது பாவிக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு விவசாயிகளும் .தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

### நிலத்தின் ஈரம்

நிலத்திலே ஈரம் இருக்கும் காலங்களில் தான் இம்மருந்து அடிக்கப்படவேண்டும். நிலத்தில் ஈரம் இருந்தால்தான் அடிக்கிற மருந்தும் உரிய முறைப்படி செறிந்து பயனை விளைவிக்கும். வயலில் ஈரம் இருந்து நெல்லும் புல்லும் முளைப்பதற்கு முன்பாக இம்மருந்து அடிக்கப்படவேண்டும்.

புல்லு மருந்தை அடிக்கின்றபோது மருந்து முதலில் துளித்துளியாகத்தான் விழும். துளித்துளியாக விழும் இம்மருந்து பின்னர் பரவி ஒரு படையாக வரும். நீர் ஊற்றி வீட்டைக் கழுவுவது போல தோட்டத்தில் செய்யமுடியாது. துளித்துளியாக விழும் மருந்து நிலத்திலே ஈரம் இருப்பதால் அது கசிந்து நாலா பக்கத்திலும் பரவி ஒரு தண்ணீர் படலம் போல காணப்படும்.

ஈரம் இருக்கும்போது தானே நெல்லும் புல்லும் முளைக்கின்றன. இவை இரண்டும் முளைத்துக்கொண்டு நிலத்தின் மேற்பாகத்தை அடையும்பொழுது மேலே உள்ள இந்த மருந்துப் படையில் முட்டி மோதுகின்றன. முளைகள் மருந்துப் படையில் முட்டும் வரை எந்த வித பாதிப்பையும் பெறமாட்டா. மருந்துப் படையில் பயிர்களின் நுனி முட்டியதும் நெற்பயிரின் நுனிகள் கருகும் ஆனாலும் நெற்பயிர் தொடர்ந்து முளைத்துக்கொண்டு வெளியே வந்துவிடும். நுனிதான் கருகுமே தவிர பயிர் வளர்ந்துவிடும். ஆனால் புல்லின் முளையில் இம் மருந்து பட்டவுடன் அது அப்படியே பட்டுப்போய்விடும். பின்னர் அவைமேலே வளரமாட்டா.

நிலத்திலே ஈரம் இல்லையாயின் காய்ந்த இடத்தில் விழும்துளி அமிழ்ந்துபோய்விடும். தெட்டம்தெட்டமாக மருந்து நின்றால் இடைவெளிகளுக்குள்ளால் புற்கள் முளைத்து வெளியே வந்துவிடும்.

### 'நொசில்கள்'

புல் மருந்து அடிப்பதற்கென தெளி கருவிகளுக்குப் பொருத்தக்கூடிய சில 'நொசில்கள்' (உபகரணங்கள்) இருக்கின்றன. இதனைப் பாவித்து மருந்தை அடிக்கும் போது எல்லா இடங்களிலும் ஒரே சீரான அளவில் விழுகின்றன.

மருந்து அடித்தபின் அதன் மேல் நடந்து செல்லக்கூடாது. நடந்துசென்றால் அந்த இடத்து மருந்து வீணாகிவிடும். அந்த இடங்களில் புல் முளைக்கச் சந்தர்ப்பம் உண்டு. தெருவில் தார் ஊற்றுவது போல வயலின் பக்கம் பக்கமாக நின்று தெளிகருவிகளால் மருந்தை விசிறும் போது நாம் அதன் மீது நடக்கமாட்டோம். மருந்தும சீராகிவிடும். ஏனைய பயிர்களுக்கு கிருமிநாசினி விசிறுவது போல் இதற்கும் அமுக்கமாக அடிக்கத் தேவையில்லை.

அநேகமான விவசாயிகள் புல்லுக்கு மருந்து அடிக்கும்போது இந்த நொசில்களைப் பூட்டிப் பயன்படுத்துவதில்லை. இந்த நொசில்களை 'பொலிஜென்' (உடைப்பு பீச்சு முனை) என்று கூறுவார்கள். இந்த நொசில்களைப் பற்றித் தெரிந்திருந்தும் கூட அதனை எதற்காகப் பயன்படுத்துவது என்பது தெரியாமையால் தான் விவசாயிகள் அதனை உபயோகிப்பதில்லை. 'துலாப்பம்' எனக் கூறப்படும் 'ஹெலிஸ்பம்' வாங்கும்போது இந்த நொசில்களும் வழங்கப்படுகின்றன.

எவ்வளவோ பணம் செலவழித்து புல் மருந்து அடித்தாலும் இந்த நொசில்களை உபயோகப்படுத்தாமையால் புற்களைக் கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். பயிர்ச் செய்கையின் போது சில சிக்கல்கள் நிகழலாம். உரியகாலத்தில் இம் மருந்தை அடிக்கத் தவறிவிட்டால் அதற்கான மாற்றுவழியும் உண்டு.

### மாற்றுவழி

உரிய காலத்தில் 'கோல்' மருந்தை அடிக்கத் தவறிவிட்டால் கவலைப்படத்தேவை இல்லை. அதற்கு மாற்று வழியும் உண்டு. நல்ல மழைபெய்து தப்புத் தண்ணீராக வயல் நிலம் காணப்படும்போது இம்மருந்தை மண்ணுடன் கலந்து விசிறலாம். தப்புத்தண்ணீரில் இம் மருந்து செறிந்து கொண்டு நெல்லைத் தாக்காமல் புல்லை அழித்துவிடும்.

### மருந்தின் அளவு

ஓர் ஏக்கர் நிலத்திற்கு 35கிலோ மண்ணில் கோல் மருந்தைக்கலந்து விசிறலாம்.

காலையில் நெற்பயிரில் பனிநீர் படிந்திருந்தால் அவை வடிந்து காய்ந்த பின் தான் மணலை எறிதல் வேண்டும். பயிர் மீது பனிநர் இருப்பின் கலக்கப்பட்ட மண் அதன் மீது ஒட்டிப்பிடித்து அவ்விடங்களில் கருக்கலை ஏற்படுத்தும். எனவே வெயில் ஏறிய பின்னரே மணலை எறிவது உகந்தது.

பயிர் முளைத்து 15-20 நாள் பயிராக இருக்கும்போதும் இவ்வாறு மணலை விசிறலாம். அது புல்லை அழித்துவிடும். ஆனால் நெல் விதைத்து மழைபெய்து நெல்லும் புல்லும் முளைக்கப்போகிறது எனத் தெரிந்தவுடன் மருந்தை அடிப்பது தான் சிறந்தது. விதைத்த நாளைக் கணக்குப் பார்க்கக் கூடாது. புழுதி நெல் போட்டுக் கடும் ஈரம் பிடித்து அவை முளைக்கப் போகின்றன எனக் கண்டவுடன் நொசிலைத் தெளிகருவியில் பூட்டி, தார் ஊற்றுவதுபோல எல்லா இடங்களும் நனையக் கூடியவாறு மருந்தை அடிக்க வேண்டும். நேர காலம் தவறி முளை விட்டதாக இருப்பின் 20-25நாள்களுக்குள் மழைபெய்து தப்புத் தண்ணீராக உள்ள நேரத்தில் மேற்கூறியவாறு மண்ணுடன் மருந்தைக்கலந்து விசிறலாம்.

### பன்றி நெல்

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வயல் நிலங்களில் அழிக்க முடியாதது எனக் கருதப்படும் களையாக பன்றிநெல் விளங்குகிறது. இதுவும் ஒரு நெல்லினம்தான். ஆனால் உபயோகமற்றது. வெளிமாவட்டங்களில் இருந்துகொண்டு வரப்படும் விதைநெல்லுடன் சேர்த்து இக்களை இங்கு வருவதாகக் கருதப்படுகிறது. இதனை ஒழிப்பதற்குச் சிறந்தவழி இவற்றின் எல்லாக் கதிர்களையும் கொய்து அழிப்பதேயாகும். பன்றிநெல, ஒரு நெல் இனமாக இருப்பதால் இவற்றை அழிப்பதற்காக கிருமிநாசினிகளை விசிறினால் அவை நெற் பயிரையும் பாதிக்கும். அதன் கதிர்கள் வெளிவரும்போது அவற்றை பார்த்துப் பார்த்து நேர காலத்துடன் கொய்து அழித்துவிடவேண்டும். இதுவே உகந்தவழி.

சில பயிர்களில் தன் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதில்லை. வேறு பயிர்களில் இருந்து தான் வரவேண்டும்.

கத்தரி, தக்காளி போன்ற பயிர்களில் அயன் மகரந்தச் சேர்க்கைதான் நடைபெறுகின்றது. நெல்லைப்பொறுத்தவரை 90சதவீதம் தன் மகரந்த சேர்க்கையே நடைபெறுகின்றது. எனவே பன்றி நெல்லின் கதிர்களை அழிப்பதன் மூலமே இக்களையை ஒழிக்கலாம்.

### ஏராளன்

சங்குவேலி பகுதியைச்சேர்ந்த முதிர்ந்த விவசாயியான பாலசிங்கம் என்பவர், பன்றி நெல்களை அழிப்பது தொடர்பாக தமது அனுபவத்தை பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

வயலில் வரிசையாக குழி நெல்லைப் போட்டு, அவைமுளைத்து 6-7 அங்குலப் பயிராக வரும்போது நெல்தவிர்ந்த ஏனைய சகல களைகளையும் துப்புரவாக 2,3 தடவைகள் முற்றாகப் பிடுங்கி எடுத்துவிடவேண்டும். பின்னர் குழிநெல் இடை வரிசையில் சென்று நெல்லுடன் வளரும் பன்றிநெல்லையும் ஏனைய களைகளையும் களைவது இலகுவாக இருக்கும். பன்றிநெல், கதிர்வந்து ஏழுநாள்களுக்குள் நிலத்தில் விழும். நிலத்தில் விழுந்த பின்தான் பால்பிடிக்கிறது. பனறிநெல்லை ஒரே இடத்தில் கொட்டி அழித்துவிட வேண்டும். மண்ணால் மூடிவிட்டால் அவை முளைத்துவிடும்.

கமநல சேவை நிலையங்கள் விவசாயிகளுக்குச் சிறந்த ரக விதை நெல்லைப் பெற்று வழங்க முன்வரவேண்டும்.

★ நெற் பயிர்ச்செய்கை, களைகள் அகற்றல் போன்றவற்றுக்கான நவீன தொழில்நுட்ப அலோசனைகளை வழங்க வேண்டும்.

★ விவசாய சம்மேளனங்கள் தங்களிடம் இருக்கும் நிதியைப் பயன்படுத்தித் தமக்குத் தேவையான விதை நெல்லை முன்கூட்டியே நேரகாலத்துடன் பெற்று வைத்துக்கொள்ள வேண்டும்.

## மஞ்சளின் மகிமை



மஞ்சள் எமது உணவில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒரு சுவைச் சரக்குப் பயிராகும். இதன் தாவரப் பெயர் 'கேகியூமா லோங்கா' என்பதாகும். கஸ்தூரி மஞ்சள் என்னும் வாசனை மஞ்சளின் தாவரப் பெயர் கேகியுமா அரோமற்றிக்கா என்பதாகும். இவை சைட்டாமினேசியே என்னும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தவை. வாழை, இஞ்சி, ஏலம் போன்றனவும் இக்குடும்பத்தைச் சேர்ந்தனவாகும்.

சீனா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் உற்பத்தியான மஞ்சள் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் பின்னர் பரவியது.

மஞ்சள் செடியில் உண்டாகின்ற தண்டுக் கிழங்குகளுக்காக மஞ்சள் பயிர்செய்யப்படுகிறது. இந்தியாவின் தமிழ்நாட்டில் மஞ்சள் ஒரு முதன்மையான வணிகப் பயிர். ஆசிய நாடுகளில் மஞ்சள் கறிவகைகளுக்குப் பயன்படும் ஒரு முக்கியமான பொருள். பெண்கள் மஞ்சளைத் தேய்த்துக் குளிக்கிறார்கள். இதனால் முகம் அழகாகிறதென்றும், நுண்கிருமிகளினால் நோய்கள் ஏற்படுவதை மஞ்சள் தடுக்குமென்றும் கூறுவர். தென்னிந்தியாவில் மஞ்சள் ஒரு மங்கலப் பொருளாகக் கருதப்படுகிறது. பல நிறப் பொருள்களைச் செய்வதற்காக மஞ்சளை மிகுதியாகக் கையாள்கின்றனர்.

மஞ்சள் ஒரு வெப்ப வலயப் பயிர். எனினும் நீர் வசதியும் நிறைந்திருக்கவேண்டும். செழிப்பான வண்டல் நிலங்களிலும் களி நிலங்களிலும் மேட்டு நிலங்களிலும் நெல், வாழை, கரும்பு முதலியவற்றுடன் மஞ்சள் ஒரு கலப்புப் பயிராக செய்கை பண்ணப்படுகிறது. சில காட்டுப் பகுதிகளிலும் மஞ்சள் பயிரிடப்படுகிறது.

மஞ்சள், உடம்பு நாற்றத்தை நீக்கும். பசியுண்டாகும். வாந்தி, வாத, பித்த, கபதோடம், தலைவலி, நீரேற்றம், பிரமேகம் பீநிசம், வீக்கம், வண்டுகடி, நஞ்சு முதலியவற்றுக்கும் பரிகாரமாக அமைகிறது.

சி.சிவமலர்

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை; மாணவர் மத்தியில் குழப்பம்

வட்டக்கச்சி,பெப்.8

2005ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை எப்போது நடைபெறும் என்பது தொடர்பாக மாணவர் மத்தியில் பெரும் குழப்பமான நிலை நிலவுகிறது.

கடந்த டிசெம்பர் சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பெருமளவு பாதிப்புக்குள்ளானதால் அதில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட பரீட்சையொன்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவ்வாறு நடத்தப்படமாட்டாது எனவும் சகலருக்குமாகச் சேர்த்து சிறிது காலதாமதமாக பரீட்சை நடைபெறும் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், ஞாயிறு இரவு பி.பி.சி.இற்கு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் செவ்வியளித்த போது, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஜூன் மாதமளவில் தனியான பரீட்சை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான செய்திகள் மாணவர் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் ஒரு தெளிவான தகவலை உத்தியோகபூர்வமாக வழங்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும் என மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (405)

# சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் 150ஆவது ஆண்டு நினைவுவிழா



யாழ்ப்பாணம்.பெப்.8

செந்தமிழ் சிரோண்மணி சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் 150 ஆவது ஆண்டு நினைவு விழா எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 5.16 மணிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கா.பொ.இரத்தினம் தலைமையில் வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பெ.விஜயரத்தினம் நிகழ்த்தவுள்ளார். புலவரின் நினைவுப்பேருரையை பேராசிரியர் சி. தில்லைநாதன் நிகழ்த்துவார்.

நிகழ்வில் புலவரின் பூட்டனான இ.சிறிஸ்கந்தராசா எழுதிய பல்சுவை சுரங்கம் என்ற நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

அத்துடன் பொதுநல சேவையில் ஈடுபட்டுவரும் மொறீசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதர் தெ.ஈஸ்வரன் தம்பதியரும் தொழிலதிபர் (சீகல் நிறுவனம்) ந.வாகீசன் தம்பதியரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (10)





முதற்தர வானொலி
சூரியன் எப் எம்
யாழ்ப்பாணம் முழுவதும்
துல்லியத் தெளிவுடன்
93.0 FM
அலைவரிசையில்!

சூரியன FM
SOORIYAN FM

சூரியன் என்றும் உங்களுடன்!


## திருமண வாழ்வின்
## 25 ஆம் ஆண்டு நிறைவு
## வெள்ளிவிழா வாழ்த்து



திரு. இரத்தினசபாபதி
திருமதி சத்தியசோதி

தம்பதிகள்
தமது திருமண வாழ்வின் 25 ஆவது ஆண்டு நிறைவையிட்டு வெள்ளிவிழாக் காண்பதை முன்னிட்டு அவர்களை இன்னும் பல்லாண்டுகாலம் இனிதே வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

கௌதமி, அபிராமி, புகழரசி, ஆதித்தன்,
கஜீதா, ஜஸ்மிலன், சுயினா, சந்தியா.

(41831)(24-19

## 45 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணின் மலராய் 30 ஆம் 11 ஆம் 1972
விண்ணின் வித்தாய் 26 ஆம் 12 ஆம் 2004

முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர்

### கந்தசாமி குணேஸ்வரன்

[ரமணன்]

(பரிசோதகர், (I.P.) தமிழீழக் காவல்துறை)

தமிழீழ சீர் திருத்தப் பணியில்
சினம் கொள்ளாமல்
பணியாற்றினாய்
தோளோடு தோள் நின்று
தோழர்களை வழிகாட்டினாய்
யாவரும் புகழ் பாடப் பரணியில்
பண்போடு வாழ்ந்தாய்
எதிராய் யாரு உண்டு
இந்தப் பாரினில் உனக்கு
பாலகனைக் காக்கவென்று
தயங்காமல் அலையினை எதிர்த்து
ஆழிப் பேரலையில்
அழகனாய் போனாயோ
அழகான திருமேனி
அனலாய் போனதோ
ஆறாது எம் நெஞ்சம்
அணையாது உன்
எண்ணம்
உன் கனவுகளை
நனவாக்குவோம்
என்றும் உன் நினைவோடு.

இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

விவேகானந்த ச.ச.நிலையம்
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

(41857)

உன்பிரிவால் வாடும்:
மாமா: சோமசுந்தரம்
குடும்பத்தினர்.

## சுனாமியால் முல்லைத்தீவில் இடம்பெயர்ந்த மக்களை இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்த நடவடிக்கை

முல்லைத்தீவு,பெப்.8

கடற்கோள் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந் துள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள ளப்படவுள்ளன.

முல்லைத்தீவு செயலணிக்குழு வளாகத் தில் கடந்த 4 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை யின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாட லின் போதே இதற்கான தீர்மானம் எடுக்கப் பட்டது.

சுனாமிப் பேரலையினால் பெரும் அழிவைச் சந்தித்திருக்கும் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பொது மண்டபங்களிலும் பாட சாலைகளிலும் தங்கியுள்ள மக்களுக்கு அடுத்த கட்ட நடவடிக்கையாக இடைத்தங்கல் முகாம் களை அமைத்து அதில் அவர்களை குடியேற் றும் செயற்பாடு தாமதமாக நடைபெற்று வருகி றது. அவற்றிலுள்ள இடர்பாடுகளை இனம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதன் மூலம் இச்செயற பாட்டை துரிதமாக்க வேண்டும். அத்துடன் 2 ஆம் கட்டமாக நிரந்தர வதிவிடங்களில் மக் களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை யும் தொழில் ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டிய அம்சங்களையும் விரைவில் சாத்தி யப்படுத்த வேண்டும் என்றும் இந்நிகழ்வில் தீர் மானம் எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு செயல ணிக் குழு உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், தமிழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட சுனாமி அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு வரும் பல அமைப்பைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர். (8-ரி)

## கால்நடை வளர்ப்பு பயிற்சி வகுப்பு

பூநகரி,பெப்.8

பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத் தில் கடந்த மாதம் 27 ஆம் திகதி கால்நடை வளர்ப்புப் பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.

நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கால்நடை வைத்தியர் செ.கௌரிதிலகன், கால்நடை அபி விருத்தி அலுவலர் க.சூரியகுமாரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

கால்நடை வளர்ப்பு, செயற்கை முறைச் சினைப்படுத்தல் தொடர்பான வீடியோப் படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. (த-403-202)

## இடம்பெயர் சேவை விரைவில் நடக்கும்

புதுக்குடியிருப்பு,பெப்.8

சுனாமி பேரலை அனர்த்தத்தில் தமது ஆவணங்களை இழந்த மக்களுக்கு அவற்றை மீளப்பெற்றுக்கொடுப்பதற்காக இடம்பெயர் சேவைகளை விரைவில் நடத்தவிரும்புவதாக முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இடம்பெயர் சேவைகளை நடத்துவதற்கு, நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் சம் மதம் தெரிவித்துள்ளன எனவும் -

இச்சேவைகள் நடைபெறும் திகதிகள் விரை வில் அறிவிக்கப்படும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (த-353-204)

## செந்தமிழினியின் 7 ஆம் ஆண்டு நினைவுதினம்

மல்லாவி,பெப்.8

இரண்டாம் லெப்டினன்ட் செந்தமிழினியின் 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த முதலாம் திகதி உயிலங்குளம் அ.த.க. பாட சாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி வி.சிறிபாஸ்க ரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை மேற்படி மாவீர ரின் தந்தை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஆசிரியர் சி.சிவகாந்தி நினைவுப பேருரையை நிகழ்த்தினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-203-322)

## பூநகரி ஆஸ்பத்திரியில் பென்சிலினுக்குத் தட்டுப்பாடு

பூநகரி,பெப்.8

பூநகரி அரசினர் வைத்தியசாலையில் பென்சி லின் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தை சேர்ந்த மக்கள் இவ் வைத தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின் றனர். இங்கு இவ்வாறான மருந்துகளுக்கு தட்டுப் பாடு நிலவுவதனால், இந்த மக்கள் முழங்கா வில் வைத்தியசாலையை நாடவேண்டியுள்ளது.

இதனால் இந்த வைத்தியசாலைக்கு உரிய மருந்துகளை அனுப்பிவைக்குமாறு சம்பந்தப் பட்டவர்களிடம் இப்பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-291-204)

## பஜனை வழிபாடு

முல்லைத்தீவு,பெப்.8

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலய முன்றிலில் அனர்த்தத்தின் போது இறந்தவர்க ளுக்கு ஆத்மசாந்தி வேண்டி யாழ்.திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களினால் கடந்த 4 ஆம் திகதி பஜனை வழிபாடு நடத்தப்பட்டது.

திருமறைக்கலாமன்றத்தினர் வழிபாட்டினை முடித்து கொண்டு முள்ளியவளை வித்தியானந் தாக்கல்லூரியிலுள்ள இடைத்தங்கல் முகாம் களில் தங்கியுள்ள மக்களுக்கு உளவள ஆற்றுப படுத்தும் நிகழ்வினை மேற்கொண்டனர்.(8-190)

## அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி

பூநகரி,பெப்.8

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர் களின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு கள் அண்மையில் ஸ்கந்தபுரம் மாவீரர் மண்ட பத்தில் நடைபெற்றன.

புலிகளின் குரல் வானொலியின் ஏற்பாட் டில் நடந்த இந்த அஞ்சலி நிகழ்வில் சுடரேற் றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-381-204)

## கிளிநொச்சி மாவட்டக்குழுக் கூட்டங்கள்

வட்டக்கச்சி,பெப்.8

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பிற்போடப் பட்ட கிளிநொச்சி மாவட்டக்குழுக் கூட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத தில் நடைபெறவுள்ளன.

மீள்வட்ட வீடமைப்புக் குழுக் கூட்டம் காலை 8 மணிக்கும் -

அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் -

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கும் -

மாவட்ட கடற்றொழில் அபிவிருத்திக்குழுக் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கும், நடைபெற வுள்ளன.

இக்கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அனை வரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாய கம் கேட்டுள்ளார். (8-405-204)

ஜெயபுரம் பிரதேசத்தில்

## பாலைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்த நடவடிக்கை

ஜெயபுரம் பிரதேசத்தில் கால்நடை வளர்ப் போரிடமிருந்து பெறப்படும் பாலைக் கொள்வ னவு செய்து சந்தைப்படுத்த பால் அபிவிருத் திச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளது.

இந்த நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி, ஜெயபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றன.

பால் அபிவிருத்திச்சபைத் தலைவர் அ.தரும ராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதல் நாள் 31 லீற்றர் பால் கொள்வனவு செய் யப்பட்டு சங்கச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட் டன.

பால் அபிவிருத்திச் சபையால் முன்னெடுக் கப்படும் இச்செயற்பாட்டினால், பால் விற்பனை செய்யவும் சந்தைப்படுத்தவும், சிரமங்கள் ஏற் படாது என பண்ணையாளர்கள் தெரிவித்தனர். (8-291-204)

## வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியில்லை

வேரவில்,பெப்.8

கிளிநொச்சி, வலைப்பாடு றோ.க.த.க பாட சாலைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கப் பட்டு வருகின்ற போதும் அங்கு ஆசிரியர் பற் றாக்குறையும் தளபாட வசதிகள் இன்மையும் காணப்படுகின்றது.

தரம் ஒன்று தொடக்கம் 9 வரையான வகுப்பு களில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்ற இந்தப் பாடசாலையில் அதிபரும், எட்டு ஆசிரியர்களுமே நிரந்தர ஆசி ரியர் சேவையில் உள்ளனர்.

இங்கு சேவைக்காக அனுப்பப்படும் ஆசிரியா கள் பல்வேறு காரணங்களைக் காட்டி வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் சென்று வருகின்ற னர்.

அத்துடன் இங்கு தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தளபாடவசதிகள் எதுவும இன்றி நிலத்தில் இருந்தே கல்வி கற்று வருவ தாகவும் இதனால் அவர்கள் பெருஞ்சிரமங் களை எதிர்நோக்கி வருவதாகவும் அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித் துள்ளனர்.

எனவே, உரியவர்கள் இதனைக் கவனத் திற்கொண்டு இந்தப் பாடசாலை வளர்ச்சிக்கு உதவுமாறும் அவர்கள் மேலும் கேட்டுள்ளனர். (8-203-404)

## பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக விளையாட்டுப் போட்டிகள்

பூநகரி,பெப்.8

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட சிறு வர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக கிளி நொச்சி, பூநகரிப் பிரதேச விளையாட்டு அபிவி ருத்திச் சங்கம் மென்பந்தாட்ட, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம் என்று பூநகரி பிரதேச விளையாட்டுத்துறையி னர் தெரிவித்துள்ளனர். (8-403-202)

அக்கராயன் மகா வித்தியாலயத்தில்

## பட்டதாரி ஆசிரியர்கள் 8 பேர் கடமையைப் பொறுப்பேற்கவில்லை

ஸ்கந்தபுரம்,பெப்.8

அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகளில் 8 பேர் தமது கடமையைப் பொறுப்பேற்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைக்கு 11 பட்டதாரி ஆசிரி யர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் மட்டுமே தமது கடமையைப் பொறுப்பேற் றுள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் இத்தகைய பாடசாலைகளில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் கடமையேற்காமை குறித்து விச னம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை தொண்டர் ஆசிரியர்கள் நிரப்பி வந்தமை குறிப்பிடத்தக்கது. (8-381-204)




## புதிய போக்குவரத்துச் சட்டங்கள் தமிழீழக் காவல்துறையினால் அறிவிப்பு

கிளிநொச்சி,பெப்.8

தமிழீழ காவல்துறையினரால் நடைமுறைப படுத்தப்பட்டுவந்த போக்குவரத்துக் சட்டங் களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

மாற்றம் செய்யப்பட்ட திருத்தச்சட்டம் இம் மாதம் 5 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தமிழீழ காவல்துறையின் வாக னப் போக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவ குமாரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சாரதிகளின் கவனயீனத்தால் அண்மைக் காலங்களில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் பற்றி யாவரும் அறிந்ததே. இவ்வீதி விபத்துக்களைத் தவிர்த்து எமது மக்களின் உயிர், உடைமை களை காப்பாற்றும் பொறுப்பு எமக்குண்டு. வீதியின் விதிமுறைகளை மீறிச் சாரத்தியம் செய்யும் சாரதி களின் மீது எம்மால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எம்மால் எடுக்கப் பட்டு வந்த நடவடிக்கையில் நீதிநிர்வாகத் துறையின் சட்டவாக்கப்பிரிவால் சில மாற்றம் செய்யப்பட்டு திருத்தச் சட்டம் 2005.02.05 ஆம நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. நடை முறைக்கு வந்துள்ள சட்டத்தை சகல வாகன சாரதிகளும் பின்பற்றி நடந்து எமக்கு ஒத்து ழைப்பு வழங்குவதுடன் மக்களின் உயிர்களை யும் உடைமைகளையும் காப்பாற்றி சாரத்தியம செய்யுமாறு வேண்டுகிறோம்.

மாற்றம் செய்யப்பட்டுள்ள சட்ட நடவடிக் கையின் விவரம் வருமாறு:

1. மதுபோதையில் வாகனம் செலுத்துதல் 2000 ரூபா -

2. அளவுக்கதிகமான வேகத்தில் வாக னத்தைச் செலுத்துதல் -

I. 40 கி.மீ.இற்கு அதிகமான வேகத்தில் செலுத்தக்கூடாதெனப் பணிக்கப்பட்ட இடங்களில்-

அ. 40 கி.மீ.இற்கு 50 கி.மீ.இற்கு இடைப் பட்ட வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் 500 ரூபா -

ஆ. 50 கி.மீ.இற்கு 60 கி.மீ.இற்கு இடைப் பட்ட வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் 1000 ரூபா -

இ. 60 கி.மீ.இற்கு அதிகமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் (மன்று நடவ டிக்கை)

II. 60 கி.மீ.இற்கு அதிகமான வேகத்தில் செலுத்தக்கூடாதென பணிக்கப்பட்ட இடங்களில்

அ. 60 கி.மீ.இற்கு 70 கி.மீ.இற்கு இடைப் பட்ட வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் 750 ரூபா -

ஆ. 70 கி.மீ.இற்கு 80 கி.மீ.இற்கு இடைப் பட்ட வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் 1000 ரூபா -

இ. 80 கி.மீ.இற்கு அதிகமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் (மன்று நடவடிக்கை)

3. அபாய எச்சரிக்கை வாகனங்களை புறக் கணித்தல் 250 ரூபா -

4. போக்குவரத்துக்கு இடையூறாக வாக னங்களை வீதியில் செலுத்துதல் அல்லது நிறுத் துதல் 250 ரூபா -

5. பின்னால் வரும் வாகனங்களுக்கு வழி விடாது பாதையின் நடு வீதியால் வாகனத் தைச் செலுத்துதல் 250 ரூபா -

6. இரவு வேளைகளில் வாகனத்தை வீதி யில் நிறுத்தியிருக்கும் போது அபாய விளக்கு எரியப்படாவிடில் 500 ரூபா -

7. வாகனத்தைவிட நீளமான அல்லது அகலமான பொருள்களை வாகனத்தில் ஏற்றிச் செல்லும் போது சிவப்பு நிற அபாய எச்சரிக் கைக் கொடி பறக்கவிடப்படாவிடில் இரவில் இவ் வாறு செல்லும் போது சிவப்பு நிற வெளிச்சம் போடப்பட்டிருக்காவிடில் 500 ரூபா -

8. வாகன இலக்கத் தகடு பொருத்தாமல் வாகனத்தைச் செலுத்துதல்.

I வாகன இலக்கத்தகடுகளில் ஏதாவது ஒன்றினையோ அல்லது இரண்டினையோ இல் லாது செலுத்துதல் 300 ரூபா -

II வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள இலக கத் தகடுகள் தெளிவின்றி காணப்பட்டால் 200 ரூபா -

9. வாகனத்தை நிறுத்தும்படி காவலர் சைகை காட்டியபோது வாகனத்தை நிறுத்தாது செல் லுத்துதல் 500 ரூபா -

10. இரவு வேளைகளில் வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல் 1000 ரூபா -

அ. ஒருபக்க வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல் 500 ரூபா -

ஆ. உந்துருளி வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல் 350 ரூபா -

இ. ஈருருளி வெளிச்சமின்றி வாகனம் செலுத் துதல் 50 ரூபா -

ஈ. மங்கிய வெளிச்சம் போடாமல் வாகனம் செலுத்துதல் (டிம்) 250 ரூபா -

11. தடை செய்யப்பட்ட பாதையால் அல் லது வழமைக்கு மாறாகப் பக்கத்தினால் வாக னத்தை செலுத்துதல் 250 ரூபா -

12. வாகனத்தில் மேலதிகமான வழிச் செல்லுநர்களை ஏற்றிச் சென்றமைக்கு (பின் கதவில்/மேல்கூடாரத்தில்/மிதிபலகையில்) 350 ரூபா -

13. இருபக்க பார்வைக் கண்ணாடிகள் இன்றி வாகனத்தை செலுத்தியமை ( ஒன்று அல்லது இரண்டும்) 350 ரூபா -

14. ஈருருளிகளில் சமாந்தரமாக (பக்கம் பக்கமாக) ஓட்டிச்செல்லுதல் 50 ரூபா -

15. உழவு இயந்திரத்தில் ஆள்கள் இருப் பதற்கென பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஆச னங்கள் அற்றபகுதிகளில் ஆள்களை ஏற்றிச் செல்லுதல் 250 ரூபா -

அ. கலப்பை, சுழல்கலப்பை போன்றவற்றை பூட்டி நெடுஞ்சாலையில் செலுத்துதல் 250 ரூபா -

16. ஏனையவைகள் 250 ரூபா - என்றுள்ளது. (8)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பிரான்சில் வசிக்கும் ஆனந்தசங்கர் – பாமினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **ஆகாஷ்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, சுழிபுரத்தில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தை, யதுசன் அத்தான், மருதனார் மடத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, ஹம்சி அக்கா, ஜெனன் அண்ணா, ஆசைமாமா, பிரான்சில் வசிக்கும் பெரியமாமா, பெரியத்தை, நிருபன், நிவேதன் அத்தான்மார், நிருத்திகா மச்சாள், ஜேர்மனியிலிருக்கும் சின்ன மாமா, சின்னத்தை, கஜீபன், கஜானன் அத்தான்மார் ஆகியோர் பல்லப்ப வைரவர் துணைகொண்டு சீரும்சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

– அம்மப்பா சண்முகநாதன்.

(C/40849)

# பேக்கரி உரிமையாளர்கள் சகலருக்குமான முக்கிய கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்தி செய்யும் உரிமையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் உரிமைபெற்ற சகலருக்குமான கலந்துரையாடல் நாவலர்வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். விலைக்கட்டுப்பாட்டுப் பொறுப்பாளர் திரு. செழியன் தலைமை தாங்குவார். மற்றும் யா.மா.அரசியல்துறைப் பொறுப்பாளர், நிர்வாகப் பொறுப்பாளர், கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர், பொது இணையங்களின் பொறுப்பாளர் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

காலம்:- 09.02.2005 புதன்கிழமை பகல் 10 மணி
இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
விடயம்:- வெதுப்பகங்களுக்கான மா விநியோகம்

இக்கலந்துரையாடலில் வெதுப்பக உற்பத்தி செய்யும் சகலரும் தவறாது கலந்துகொண்டு தேவையான மாவினைப் பெறுவதற்குரிய உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யா.மா.பே.உ.சங்கம்.
யா.மா.வெ.உ.கூ.சங்கம்.

(சி-40858)

# 45 ஆம் நாள் நினைவலைகள்




அன்னை மடியில் 10 03 1935 — கடலன்னையின் பிடியில் 26 12 2004 — அன்னை மடியில் 18 06 1956

திருமதி இராஜரட்ணம் இராசம்மா — செல்வி செல்வமலர் இராஜரட்ணம்

10ஆம் வட்டாரம் உடுத்துறை வடக்கு, தாளையடி

இந்துமா கடலே இயற்கை அன்னையே
எம் உறவுகளை எங்குசேர்த்தாய் ?
தாங்குமா எம் நெஞ்சம்
தவிக்கிறோம் உறவிழந்து ?
செங்கடலின் சீற்றத்தால்
சிற்றன்னை, அத்தை எனும் உறவிழந்தோம்
அலை ஓங்கி அடித்ததினால்
அன்பான அம்மாவை, மாமியை, பெத்தம்மாவை
அடியோடு நாமிழந்தோம் !
பேரலையின் பேரழிப்பதனில்
தூரச் சென்ற உமை நினைத்து
பேரப்பிள்ளைகள் நாம் புலம்பியழுகின்றோம்.
பொங்கியெழும் கடலலைக்கு
பொறுக்கவில்லை எம் உறவுகளின் சேர்ந்திருப்பு
ஆழிப்பேரலையின் தாண்டவத்தில்
செழிப்போடு நாம் வாழ்ந்த
சிற்றூரே சிதைந்தழிந்து விட்டதே!
நெஞ்சம் துடிக்குதம்மா – உமக்கு
நேர்ந்த கோரத்தை எண்ணிட..
சுனாமி அனர்த்தம் விளைவித்த உம் பிரிவின்
சோகத்தின் வடுக்களைச் சுமந்தபடி என்றும் – உம்
நினைவுகளுடன் வாழும்...

**சகோதர, சகோதரிகள்:**
அன்னம்மா, செல்லம்மா, முத்தம்மா, தேவி, குஞ்சு, தியாகு, துரை, கிட்ணன், வைரவப்பிள்ளை.

**மருமக்கள்:**
சறோ, றோசா, சின்னப்பிள்ளை.

**பிள்ளைகளும், சகோதரர்களும்:**
தவம் (உடுத்துறை), பஞ்சலிங்கம் (லண்டன்), ரவீந்திரலிங்கம் (டென்மார்க்), பாலச்சந்திரன் (கனடா).

**பூட்டப்பிள்ளைகள்:**
நிவேதன் (நோர்வே), சுவேதன் (நோர்வே).

**பேரப்பிள்ளைகள்:**
சாந்தா, ரவி (நோர்வே), நிசாந்தன், நிசன்யா,
நிலாந்தன் (டென்மார்க்), ராசா (லண்டன்).
சிவா, செல்வா, வசி (உடுத்துறை).
சோபனா,சயா, திவ்வி (வவுனியா).
கிளிநொச்சி (நீதிமன்றத்துக்கு அருகில்).

இந்நாளில் கடலலையின் கோரப்பசிக்கு இரையான எமது உறவுகள் அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

## சுனாமி நிதியத்துக்கு எழுச்சிப் பேரவை உதவி

நல்லூர்,பெப்.8

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியத்திற்கென நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவை முதற்கட்டமாக 20 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதேசமயம், ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெடுந்தீவுப்பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்ட நிவாரண உதவிப் பொருள்களையும் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச்செயலாளர் சுகணேசலிங்கம், தலைவர் எம்மாயாம்பிள்ளை ஆகியோர் கையளித்துள்ளனர். (ஐ-111)

## கூட்டுறவுச் சங்க திறப்பு விழா

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு கிராமிய வங்கி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறவுள்ள திறப்பு விழா நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக கூட்டுறவு ஆணையாளர் கனகசபாபதி கலந்துகொண்டு கூட்டுறவு கிராமிய வங்கியைத் திறந்துவைப்பார். (த-190)

# தாதியர் தேவை

தாதிய சேவையில் முன் அனுபவம் உள்ளவர்களும் தாதியர் பயிலுநர்களும் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

போதிய முன் அனுபவமும் தகுதியும் உடையவர்களுக்கான ஆகக் குறைந்த மாதாந்த வேதனம் ரூபா 5000/= வழங்கப்படும்.

10.02.2005 வியாழன் பி.ப.3.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

Jaffna Medical Center,
Philip Nursing Home Building,
228, Main Street, Jaffna.

(41868)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

★ அம்பிகாபதி இராஜேஸ்வரி ★ சுநேந்திரன் கலைவாணி
★ அம்பிகாபதி சூரியப்பிரகாஷ் ★ அம்பிகாபதி இளவரசி
★ சுநேந்திரன் சுகிந்தன் ★ அம்பிகாபதி எழிலரசன்

கடந்த 26.12.2004 சுனாமியால் அள்ளுண்ட எமது குடும்பத்தினரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (09-02.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(41863)(22)

அம்பிகாபதி, சுநேந்திரன்.

# 45ஆம் நாள் நினைவலைகள்




அன்பினால் அரவணைத்து
அனைவருக்கும் அருமருந்தாய்
விளங்கிய அன்புத் தெய்வங்களே!
விதி செய்த சதி சுனாமிப் பேரலையாய்
விண்ணுலகம் அனுப்பியதோ?

எல்லை ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

(41856) (24-11-18)

பொன்னையா குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

தோற்றம் 10.02.1945 — மறைவு 11.01.2005

11.01.2005 இல் காலமாகிய எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வில்லூன்றிக் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 10.02.2005 வியாழக்கிழமை அன்னாரின் உறவினரின் இல்லத்திலும் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முதலாம் வட்டாரம்
புங்குடுதீவு.

- குடும்பத்தினர்.

## அபிராமிப்பட்டர் விழா

யார்ப்பாணம்,பெப்.8

ஏழாலை சூராவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து அபிராமி அந்தாதி பாடல்கள் பாடப்பட்டு அம்பாள் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (த-202)

# கணக்கீடு

திரு.மோதிலால் B.B.A. (F.M.Spl.) A/L 2006 – கட்டுப்பாட்டுக் க/கு செவ்., வியா. 3.30 மணி
A/L 2007 – செவ்., வியா. 4.30 மணி
ஆரம்பம்: 08.02.2005 3.30 p.m.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

(41858)

# பங்காளர் தேவை

சிறு கைத்தொழிலுக்குப் பணமுதலீடு செய்யக்கூடிய பங்காளர் தேவை. லாபத்தில் 50% தரப்படும். மேலும் விவரங்களுக்குத் தொடர்பு:

முரளி 077 6655931.

(41847)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகமுத்து நாகம்மா

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி நாகமுத்து நாகம்மா அவர்கள் 06.02.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து அவர்களின் அன்பு மனைவியும் சரஸ்வதி காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் அருணகிரிநாதன், மகாலிங்கம், ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசதுரை, சிவராசா, சதானந்தராசா, விஜயராணி (ஜேர்மனி), தர்மராசா, காலஞ்சென்ற மோகனதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகேஸ்வரி, ராகினி, கலாநிதி, சாந்தகுமாரி, பவளேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(41837)

தகவல்:நா.சதானந்தராசா
(மகன் - குஞ்சு)

## மாபெரும் இலவச சேவை

அன்புடையீர்!

செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களிலும் (08,09-02-2005) T.V.S. மோட்டார் சைக்கிள் முகவர் சேவிஸ் ஸ்தாபனத்தில் இலவச சேவை செய்து கொடுக்கப்படும். வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
எ.எட்வின்
(T.V.S. ரகு மெக்கானிக் சென்ரர்)

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(41832)


## நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.8

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

நெடுந்தீவுப் பகுதி மக்களிடம் இருந்து திரட்டிய இந்த உதவிப பொருள்களை வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் மேற்படிப் பேரவை கையளித்தது. இந்தப் பொருள்கள் விரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக சமாசம் தெரிவித்தது.

இதேவேளை-

நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியத்திற்கு முதற் கட்டமாக 20 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

(8-202)

## 3 ஆம் வருட நினைவலைகள்



தோற்றம் 16-04-1963 மறைவு 11-02-2002

திதி: 08-02-2005

அன்பின் உறைவிடமே!
ஆண்டுகள் மூன்று
ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு மட்டும்
மறையவே மறையாது!
ஓம் சாந்தி!

அமரர்
கந்தையா
பொன்னம்பலம் (B.A)
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், வன வளத் திணைக்களம்)

'சாயி இல்லம்'
பண்ணாகம், சுழிபுரம்.

உங்கள் பிரிவால் வருந்தும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 23 . 09 . 1996

புஸ்பராசா
டயானி

உதிர்வு
26.12.2004

சுனாமி ஆழிப்பேரலையால்
அள்ளுண்டு போனீரோ?
என் செய்வோம்!
ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.



மலர்வு 05 . 05 . 1999

புஸ்பராசா
தீபன்

தாழையடி, ஆழியவளை,
கொடுக்குவாய்.

தகவல்:
செ.கரன்.

கடந்த 26.12.2004 அன்று சுனாமி அலை அனர்த்தத்தால் அகால மரணமடைந்த
எமது குடும்பத் தலைவர் அவர்களின்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 13 10 1939

மறைவு 26 12 2004

அமரர்
சிவப்பிரகாசம் சிவானந்தம்
(குட்டி மாம்பழம்)

துணையாக நின்று தூய நல் வழிகாட்டி
நிறையாத வேளையில் சுனாமி அலையால் அணைத்து சென்றனையோ?
அணையாத விளக்காய் அவனியிலே என்றும் விளங்கும்
அன்புயர்ந்த தெய்வமே! எம் அகங்களில் உறைகிறதே!


கொத்திய காடு, தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சிவப்பிரகாசம் சிவானந்தம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது துயரத்தைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட விநாயக இளைஞர்கள் (விளையாட்டுக்கழகம்) தொண்டைமானாறு தொ. க. கூ. சங்கம் மற்றும் துயரத்தைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தியகாடு,
தொண்டைமானாறு.

(41817)

- குடும்பத்தினர். -





நீங்களும் இப்படித்தானா?
உங்கள் விருப்பத்தை
மட்டுமே நினைக்கிறீர்களா?
மற்றவர்களுடைய விருப்பங்களைத்
தடை செய்வது, அவர்கள் மனதைத்
துன்பப்படுத்தும் என்பதை அறிவீர்களா?
உங்கள் விருப்பங்கள் என்றபெயரில் செய்பவை,
மற்றவர் கைகளைக்
கட்டிப் போடுவதாக இருந்தால்...

நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!
வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!
சித்திரவதைப் படுவதற்கு அல்ல!

உங்களால் மற்றொருவர் மனம்
சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை
யோசித்துப் பாருங்கள்.
வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க
நீங்களும் உதவுங்கள்

இல்லத்து வன்முறைகளை
இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: உங்கள் அன்பு மற்றொருவருக்குப்
'பொன்விலங்கு' போலானால் - அது அன்பே அல்ல!

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

தென்மராட்சி,பெப்.8

சரசாலை தெய்வங்கேணி மாகாளித்தாய் சனசமூக நிலைய ஆண்டு விழா எதிர்வரும் 13ஆம் திகதி இரவு 7மணிக்கு நிலையக் கலையரங்கில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் குநபாலச் சந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (த-117)

## றோட்டரக்ட் கழகம் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,பெப்.8

நல்லூர் றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர்.

நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் நான்காவது ஆண்டுநிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வு இடம்பெற்றது. கழகத்தின் செயற்றிட்ட இயக்குநர் கே.ஓங்காரருபன் தலைமையில் இந்த இளைஞர்கள் இரத்த தானம் செய்தனர். (ப)

## இல்ல மெய்வன்மைப்போட்டி

தென்மராட்சி,பெப்.8

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்து கொள்வார். (த-117)

## விபத்துக்களில் மூவர் காயம்

தென்மராட்சி,பெப்.8

விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி இந்த விபத்துக்கள் இடம்பெற்றன.

சங்கத்தானையில் இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மந்துவிலைச் சேர்ந்த இ.அருந்தவமூர்த்தி (வயது 44) என்பவரும் -

முள்ளியவளையில் இடம்பெற்ற மிதிவண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் முள்ளியவளையைச் சேர்ந்த எஸ்.டேவிட் (வயது 35) என்பவர் கைவிரல் முறிந்த நிலையிலும், சங்கத்தானையில் இடம்பெற்ற மிதிவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் தியாகராசா கலைமகள் (வயது 21) என்பவருமே காயமடைந்தவர்களாவர். (த-117)

## தவக்காலம் நாளை ஆரம்பம்

குருநகர்,பெப்.8

கிறிஸ்தவர்கள் யேசுவின் திருப்பாடுகளை நினைவுகூரும் தவக்காலம் நாளை புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகின்றது.

சகல தேவாலயங்களிலும் நாளை திருநீற்றுப் புதன் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

யாழ் மரியன்னை பேராலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (8-51-202)


## அலையடித்து ஆறாத்துயரில்...

## 45 ஆம் நாள் நீங்காத நினைவுகள்



பிறப்பு 17 . 04 . 2003

பிரதீபன் ரிஷிகாந்



பிறப்பு 26 . 12 . 1958

கனகரத்தினம் அருந்தபலீலா

(வேம்படி, உடுத்துறை)



பிறப்பு 22 . 11 . 1981

விமல்ராஜன் புஸ்பஸ்ரீ

(உடுத்துறை)



பிறப்பு 22 . 04 . 1949 — இறப்பு 12 . 10 . 2003

ஆறுமுகம் வேலாயுதபிள்ளை

அலைகடலால் அல்லலுற்று
அமரராகிவிட்ட
விலை மதிக்க முடியாத
அன்புத்தெய்வங்களே!
நிலை தடுமாறியே நித்தமும் நாம்
தவிக்கின்றோம்,
கொலை செய்த ஆழியைக் கொடுமை
சொல்லி என்னபயன் ?

இறப்பு :- 26 . 12 . 2004

இந்நாளில் இறப்பெய்திய அனைத்து ஆத்மாக்களும் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம். அனைவரையும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

குடும்பத்தினர்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பிறப்பு 05.10.1971
செல்வி வேலாயுதபிள்ளை இந்திராதேவி
(ஆசிரியை)
பிறப்பு 12.02.1970
திருமதி . தர்மலிங்கம் லலிதாதேவி
பிறப்பு 10.10.1978
திருமதி . கணேசலிங்கம் றஜனிதேவி
பிறப்பு 16.11.1998
செல்வி கணேசலிங்கம் றம்மியா
பிறப்பு 25.12.2003
செல்வன் கணேசலிங்கம் ஜவர்ஷன்
[வத்திராயன், தாழையடி]

இறப்பு 26 . 12 . 2004



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16 - 08 - 1928



உதிர்வு 01 - 02 - 2003

### திருமதி கனகசபை சரஸ்வதி

திதி: 08-02-2005

என்றும் எம்மனவானில் அமைதிகொள்ளும்
அம்மாவே! நீங்கள் பிரிந்து சென்று இன்றுடன்
இரண்டு ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்!

சுளானை.
சுன்னாகம். (41821)(46-14-26) - குடும்பத்தினர்.



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 02 - 01 - 1954



இறப்பு 26 - 12 - 2004

### திருமதி மயில்வாகனம் விமலாதேவி

26-12-2004 சுனாமி ஆழிப்பேரலையில் சிக்குண்டு உயிரிழந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு ஆறுதல் கூறியும் அனுதாபம் தெரிவித்தும் இன்னும் பலவழிகளில் உதவிகள் புரிந்தும் எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (08-02-2005) செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நாளை (09-02-2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வத்திராயன் வடக்கு,
தாழையடி. (41640)(46-14-26)



## இலங்கை இதழியல் கல்லூரி

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் (SLPI) ஓர் இணைப்பு அமைப்பு

# பணிப்பாளர்

## - இதழியல் கல்லூரி

இலங்கை இதழியல் கல்லூரி உயர்ந்த தரத்திலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் முக்கிய நோக்குடன் நிறுவப்பட்டது. இக்கல்லூரி முழுநேர டிப்ளோமா பாடநெறியொன்றை நடத்துவதுடன் குறுகிய தவணையுடனான மத்திய தொழில்சார் பத்திரிகைத்துறை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உயர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆய்வுத்திறம் வாய்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்தி ஒழுங்குமுறையாக நடத்தி வருகிறது. இக்கல்லூரியின் மாணவர்கள் நவீன வசதிகள், கலை உபகரணங்கள் சகிதம் வள ஆய்வு நிலையம் ஒன்றில் கற்கவும் பயிற்சி பெறவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர். அத்துடன் இலங்கை இதழியல் கல்லூரி சுவீடனின் பத்திரிகையாளர்களுக்கான மேற்கல்வி நிறுவனமான "போஜோ"வுடன் பங்குதாரராக விளங்குவதால் அது ஒப்பற்ற மேன்மை வாய்ந்த நிலையமாக பலம் பெற்றுத் திகழ்கிறது.

இதழியல் கல்லூரியில் "இதழியல்துறை கல்லூரி - பணிப்பாளர்" பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இதழியல்துறை பணிப்பாளர் பதவியானது இக்கல்லூரிக்குள்ளான அதிசிரேஷ்ட நிலைவாய்ந்த பதவியாகும். இப்பதவியானது இப்பிராந்தியத்தில் இக்கல்லூரியை பத்திரிகையாளர் பயிற்சிக்கான அதிமேன்மை வாய்ந்த நிலையம் என்ற அந்தஸ்துக்கு வழிநடத்திச் செல்லும் முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ளது. இப்பதவியை வகிப்பவர் இலங்கை பத்திரிகைத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்கும் அறிக்கையிடுபவராக இருக்கும் அதேவேளை உயர்ந்த அனுபவம் வாய்ந்த ஊடகத்துறைப் பயிற்சி வல்லுனர் குழு ஒன்றுடன் சுதந்திரமாக பணிபுரிபவராகவும் இருப்பார். இப்பதவிக்கு நிறைவான

இப்பதவிக்கான விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய ஏனைய தகைமைகளாவன:-

- இளமாணி பட்டம் மற்றும் ஊடகக் கல்வி அல்லது அது தொடர்பான கல்வித்துறையில் பட்டப் பின் படிப்பு தகுதிகள் விரும்பத்தக்கது.
- ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி மற்றும் மிகச்சிறந்த தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகளில் திறன்கள்.
- ஊடக நிறுவனங்கள், பயிற்சி.'.கல்வி ஸ்தாபனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் அல்லது கூட்டு அமைப்பு ஆகியவற்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றதற்கான நிருபிக்கப்பட்ட அத்தாட்சி.
- ஊடக நிறுவனங்களுடனும் அவை தொடர்பான தொழில்சார் நிறுவனங்களுடனும் மிகச்சிறந்த தொடர்பு கொண்டிருத்தல்.
- சர்வதேச ரீதியில் இது போன்ற பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தக் கூடிய திறமை.

இதழியல் கல்லூரிப் பணிப்பாளர் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் உயர்ந்த தரங்களை நிறுவுபவராகவும் அவற்றைப் பேணுபவராகவும், சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து மிகச் சிறந்த முன்மாதிரியாக விளங்குபவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு கணிசமான ஊதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் ஒன்றும் பாவனைக்கு வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் உறவு அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன் விவரமான சுயவிபரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு 2005 பெப்ரவரி 15ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை பத்திரிகை நிறுவனம்
65.'.5, வார்ட் பிளேஸ்,
கொழும்பு - 7

இலங்கை பத்திரிகை நிறுவனம் சமத்துவமான வாய்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.



யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுபபினர் றொபேர்ட் ஈவன்ஸ் மற்றும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகிகள் ஆகியோர் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ஈவன்ஸ‌ுக்கும் குழுவினருக்கும் விளக்கமளிப்பதை முதலாவது படத்திலும் ஈவன்ஸுடன் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் மற்றும் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகிகள் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (12)

# சுனாமி பாதித்த மக்களைச் சந்தித்த போது அழிவின் கொடூரத்தை இனங்காண முடிந்தது

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டபோதே இங்கு இடம்பெற்ற அழிவுகளையும் மக்களுக்கு எந்தவகையில் உதவிகள் கிடைத்துள்ளன என்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது.

- இவ்வாறு தெரிவித்தார் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ்.

யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் வைத்துப் பத்திரிகையாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு எமது நாடு வழங்கவுள்ள உதவிகளை இலங்கை அரசின் ஊடாக - நேரடியாக கிடைக்க ஆவனசெய்யவுள்ளேன். பாதிக்கப்பட்ட மக்களை நிர்வகிக்கின்றவர்கள் ஊடாக உதவிகள் வழங்க ஏற்பாடுசெய்வதற்கு உறுதி கூறுகின்றேன் - என்றார்.

இச்சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி. யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களைப் புள்ளி விவரப்பதிவுகளோடு ஈவன்ஸுடம் விளக்கிக் கூறினார்.

சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், அரசினுடைய செயற்பாடுகள். அசமந்தப்போக்கு என்பன பற்றியும் இச்சந்திப்பில் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

அனைத்து மக்களையும் சமமாகக்கருதி பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலக நாடுகள் வழங்குகின்றன உதவிகளைப் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையிலான ஒரு நிலைப்பாடு ஏற்படுத்தப்படவேண்டும் என இளம்பரிதி இச்சந்திப்பில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுக் கொண்டார்.

மேற்படி இச்சந்திப்பில் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகிகள், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் கண்ணன், ஊடகப் பிரிவைச் சேர்ந்த இமயவன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-12)

# கூட்டமைப்பு பகிஷ்கரிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியால் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரித்தது.

இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அழைப்பைத் தாங்கள் நிராகரித்து விட்டனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமழர் தாயகப் பிரதேசத்தில் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தனியான கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதே தங்களின் நிலைப்பாடு என்றும் -

அந்தக் கொள்கை நிலைப்பாட்டுக்கு மாறான வகையில் இந்தக் கூட்டம் நடைபெறுவதால் அதைத் தாம் புறக்கணித்தனர் என்றும் - ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.மேலும் தெரிவித்தார். (எ-க)

# காக்கைதீவு இந்துமயானம் துப்புரவு

கல்லுண்டாய் இந்துமயாணம் கடந்த வியாழன் முதல் மானிப்பாய் பட்டினசபை, கிராமசபை ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. மயானத்தில் கழிவுப்பொருள்கள் கொட்டப்பட்டு வருவதால் அங்கு தகனக் கிரியைகள் செய்யமுடியாமலிருப்பதாக நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும்.பல சனசமூகநிலையங்களும் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு மகஜர்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கிணங்க சபையின் செயலாளர் பி.விக்டர் கழிவுகளை அகற்றி துப்புரவு செய்வதற்கென 15 தொழிலாளர்களையும் அதற்கான உபகரணங்களையும் மாயனப்பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளார். (எ-100)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 21 - 01 - 1950



ஆண்டவன் அடியில் 05 - 02 - 2000

பிரபலவர்த்தகர்

### அமரர் காசிப்பிள்ளை நந்தகுமாரன்

(உரிமையாளர், மங்கை ஸ்ரோர்ஸ், கரந்தன்)

திதி:08.02.2005

"ஆண்டுகள் ஐந்தானாலும் ஆறாது எம் துயரம்"
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"மங்கை ஸ்ரோர்ஸ்"
கரந்தன், நீர்வேலி. (41871)(43-14-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓம் விராட விஸ்வப் பிரம்மனே நம
## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 09 - 1975



உதிர்வு 07 - 02 - 2000

### செல்வன் இராசரத்தினப் பத்தர் சுகந்தன் (குஞ்சன்)

நீ எம்மைப் பிரிந்து ஆண்டுகள் ஐந்தானாலும் என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
- குடும்பத்தினர்.

நேசம் அழகு நகை மாடம்
சங்கானை/சாவகச்சேரி (41872)(43-14-16)

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

## நெஞ்சை விட்டகலாத 45 ஆம் நாள் நினைவுகள்

மலர்வு 18 ~ 12 ~ 2001



மலர்வு 22 ~ 03 ~ 1980

உதிர்வு~26.12.2004

### திருமதி விக்னேஸ்வரன் வக்சலா (ஜெயா)
### செல்வி விக்னேஸ்வரன் கிருசிகா

26.12.2004 அன்று இயற்கையின் சீற்றத்துக்கு இரையான எமது அன்புச் செல்வங்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமதி வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர். (41874)(43-14-16)

என்றும் உங்கள்
நினைவுடன் தவிக்கும்:
குடும்பத்தினர்.


மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
நான்காவது கடைசிவாரம்
17.02.2005 வரை
காட்சி : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
4 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தருண், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த



தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(C/39984)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்த், நக்மா, ரகுவரன் மற்றும் பலர் நடித்த
பாட்ஷா



தினசரி காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை



பிரசாந், சினேகா நடித்த
ஆயுதம்
நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.) (C/40667)

ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
இயக்குநர் ஹரி
ஐயா



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோண்மணி அப்புத்துரை



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோண்மணி அப்புத்துரை அவர்கள் நேற்று (07.02.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அப்புத்துரையின் அன்பு மனைவியும் சறோஜா (சுருக்கெழுத்தாளர், சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்), கமலாதேவி (ஆசிரியை - இருபாலை சீ.சீ.தமிழ்க் கலவன் பாடசாலை), அம்பிகைபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் குலசேகரம் (இ.மி.சபை, யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரமூர்த்தி, சாந்தினி ஆகியோரின் மாமியாரும் நிஷாந்தினி, நிகேதினி, இராமநாதன், நிஷாந்தன், நிருஷன், நிகேதன், லிபாகினி, சுபாகினி, பிரபாகினி, கிருபாகினி, ரமணன், சுபிகா (கொழும்பு), அசோக்காந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலசேகரம் சரோஜா (41862)(43-14-16)
(மகள் - சுருக்கெழுத்தாளர், சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்).

மக்கள் வங்கி
முன் ஒழுங்கை,
சுன்னாகம்.

## இராமு வேலாயுதபிள்ளை



வரணி இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமு வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (07.02.2005) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் லட்சுமியின் அன்புக் கணவரும் இராமு - வள்ளியம்மையின் அன்பு மகனும் சின்னப்பிள்ளை, குழந்தை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னையா, கந்தையா ஆகியோரின் மைத்துனரும் சிவயோகம், சந்திரன், இந்திரன், புவனா (ஜேர்மனி), திலகம் (சுவிஸ்), விஜயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம், இராசலட்சுமி, குகதாசன் (ஜேர்மனி), பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் மதிவதனா, பவிதாசன் (லண்டன்), பார்த்தீபன், வினோதன், வினோஜிதா, அகிலன், கீர்த்தனா, சாரங்கன், அபர்ணா, அஜித், அஸித், அஸிதா, பானுசன், பவித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2005) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை,
வரணி. (41877)(43-14-16)

தகவல்:
குடும்பத்தினர்.

# உடைவதற்கு இ.தொ.கா. சட்டியுமல்ல பானையுமல்ல!

## துணைத் தலைவர் செல்லச்சாமி காட்டம்

கொழும்பு,பெப்.08

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உடைவதற்கு அது சட்டியுமல்ல; பானையுமல்ல" இவ்வாறு காட்டமாகக் கூறினார் அதன் துணைத் தலைவரும், பிரதி அமைச்சருமான எம்.எஸ். செல்லச்சாமி.

"உடைகிறது இ.தொ.கா?", என்ற தலைப்பில் நேற்று 'உதயனின்' முன்பக்கத்தில் வெளியான செய்தி குறித்தே அவர் இப்படிக் குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஆறு மாத காலமாக ஊடகங்கள் இப்படி செய்தி வெளியிடுகின்றன. இ.தொ.காவின் பிரதி அமைச்சர் பதவியால் சர்ச்சை, தலைமையோடு இழுபறி என்றெல்லாம் ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. அப்படி எதுவும் இல்லை.

மத்திய மாகாணத்தில் கோவிந்தராஜன் கட்சியில் இருந்து வெளியேறிவிட்டார் என்பது உண்மையே. ஏற்கனவே மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுடன் முரண்பட்டுக்கொண்டு இ.தொ.காவுக்கு வந்தவர்தான் அவர். இங்கும் குழப்பிக் கொண்டு புறப்பட்டவர். பின்னர் பின்கதவால் மீண்டும் நுழைய திரைமறைவில் இரகசியப் பேச்சு முயற்சியில் ஈடுபட்டார். அது பலனளிக்காமல் போகவே வெளியில் நின்றுகொண்டு ஏதேதோ பேசுகின்றார்.

அவரை தவிர நகர, பிரதேச, மாகாண சபைகளில் எவரும் வெளியேறவுமில்லை எம்.பிக்கள் உட்பட கட்சியிலிருந்து எவரும் வெளியேறப்போவதுமில்லை.

காங்கிரஸின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மாதாமாதம் அதிகரித்து வருவதே கட்சி மேலும் மேலும் பலமடைந்து வருவதை நிரூபிக்கப் போதுமானது.

இப்போது எம் கைவசம் உள்ள அமைச்சு மூலம் மலையக மக்களுக்கு உரியவை முழுவதையும் செய்து கொடுக்கமுடிகிறது. வீடுகள், தண்ணீர் வசதி, போக்குவரத்து பாதை உட்பட அனைத்து அத்தியாவசியக் கட்டுமானங்களையும் எங்களால் அமைத்துக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இப்போது கிட்டியுள்ளது.

இ.தொ.கா. ஒரு பலம் பொருந்திய சக்தி. அது மேலும்மேலும் பலமடைந்து வருகின்றது. நல்ல தலைமைத்துவத்தின் கீழ் வழிநடத்தப்படுகின்றது. அதை உடைப்பதற்கு அது சட்டியுமல்ல, பானையுமல்ல, அதனை யாராலும் உடைக்கமுடியாது.

ஜனநாயக அமைப்பு என்ற வகையில் கருத்து பேதங்கள், பிணக்குகள் கட்சிகளுக்குள் வருவது சகஜம். ஆனால், அதைப்பேசித் தீர்த்து, மேலும் பலமாக முன்னேறும் கட்டமைப்பு ஏற்பாடு இ.தொ.காவில் உண்டு. அதைப் பற்றி யாரும் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை - என்றார் எம்.எஸ்.செல்லச்சாமி.

(எ-க)

## ஜமுனா வீதியிலிருந்து மோ.சைக்கிள் மீட்பு!

யாழ்.நல்லூர் ஜமுனா வீதிப் பகுதியில் நேற்றிரவு 10.30 மணியளவில் அநாதரவான நிலையில் இருக்கக்காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளாக இருக்கலாம் என்று நல்லூர் கோட்ட அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளுக்கு உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் வைமன் வீதியிலுள்ள யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறை அலுவலகத்தில் மோ.சைக்கிளைப் பெற்றுகொள்ளலாம் என்று யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் தெரிவித்தார்.

(எ-7)

## நெடுந்தீவில் இன்று நடப்பவை

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அருட்செல்வி சூசைப்பிள்ளை இக்னேசியா தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் யாழ்.பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர், சுவாம்பிள்ளை ஹென்றி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-112)

★ ★ ★

நெடுந்தீவு செபநாயகபுரத்தில் அமைந்துள்ள குழந்தையேசு சனசமூகநிலையம் மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் கட்டடத்திறப்பு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சனசமூகநிலையத்தின் செயலாளர் ஞா.அருள்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, சனசமூக நிலையக் கட்டடத்தினையும், முன்பள்ளியையும் நாடாவை வெட்டித் திறந்துவைப்பார். (எ-112)

## ஆழிப்பேரலையால் உயிரிழந்தோர் நினைவாக நியூயோர்க் நகரில் விசேட பிரார்த்தனை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால், ஆழிப்பேரலையின் கொடூரத்திற்குப் பலியான, பாதிக்கப்பட்ட எம் உறவுகளை நினைவுகூரும் பிரார்த்தனை ஒன்று நேற்றுமுன்தினம் நியூயோர்க் நகரில் உள்ள நம் மேய்ப்பர்லூதரன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தப் பிரார்த்தனையில், நியூயோர்க் மாநகர சபை உறுப்பினர் ஜோன் லியூ,வண. பிதா பொப் பிரிச், வண.பிதா அருளானந்தம் யாவிஸ், இந்து மதகுரு சுப்ரமணியம் ஐயர், முன்னாள் இலங்கை தமிழ்ச் சங்கத் தலைவர் ராஜரட்ணம் ஐயா, டாக்டர் ராஜாராம், நியூயேர்சி மாநில தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ராம்ரஞ்சன் உட்பட நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில்,உரையாற்றிய பலரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பணிகளுக்கு அமெரிக்கவாழ் தமிழர்கள் மட்டுமின்றி அமெரிக்க மக்களும் வழங்கி வரும் பங்களிப்பினை பெரிதும் பாராட்டியதுடன், சிறிலங்கா அரசின் பாரபட்ச நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர். (எ)

### மின்சாரசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சக்தி, எரிபொருள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளருமான சுசில் பிரேமஜயந்தவும் அதை உறுதிப்படுத்தியிருந்தார்.

அந்த முடிவுக்கு எதிராகவே போர்க்கொடி தூக்கியிருக்கின்றன ஜே.வி.பியும் தொழிற்சங்கங்களும்.

இது தொடர்பாக 129 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளோடு சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில்கள் அமைச்சர் கே.டீ.லால்காந்த, வசந்த சமரசிங்க மற்றும் ஆர்.சந்திரசேகரன் ஆகிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து கையெழுத்திட்ட எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை தேசிய தொழிற்சங்க ஒன்றிய சம்மேளனத்தின் சார்பில் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை மின்சாரசபை ஒரு தேசிய சொத்தாகும். இது தொழிலாளர் வர்க்கத்துக்கும், பொதுமக்களுக்கும் சிறந்த சேவையை வழங்கி வருகின்றது. இதை விற்பதற்கான நடவடிக்கைகள், முயற்சிகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதை விற்பதற்காகவே இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போதே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போதைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தும் கூட இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போதைய மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சரான தாங்கள் கூட இந்தச் சட்டத்தை அப்போது எதிர்த்து வாக்களித்தீர்கள்.

இப்போது அந்தச் சட்டம் பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதை நடைமுறைப்படுத்துவதை மின்சகதி மற்றும் எரிபொருள் அமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல், மக்களை இணைத்து இதை எதிர்த்துப் போராடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளது. (எ-8)

### பொதுக் கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதியால் ஒரு நிறைவேற்று அதிகாரியும் இச்செயலணிக்கு நியமிக்கப்படலாம் என்பது ஜனாதிபதி தரப்பு ஆலோசனை என்று கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் பிரதேச செயலணியில் புலிகளுக்கு அதிக இடமளிப்பதன் மூலம் நிர்வாக அதிகாரம் புலிகளுக்குப் போவதற்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி அடித்துக் கூறிவிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த சனியன்று கிளிநொச்சியில் நோர்வே அனுசரணைக் குழு சார்பில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோதும் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்பதே தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இதனால், பொதுக்கட்டமைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்படாமல் இழுபறிப்படும் நிலை நீடிக்கின்றது.

இந்தச் செயலணியின் நிர்வாக அதிகாரம் புலிகளுக்குச் சார்பாகச் செய்வதை அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கும் என்ற காரணத்தைக் காட்டியே அதற்கு இணங்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்துவருகின்றார்.

ஆனால், ஒருபுறம் ஜே.வி.பியைத் தூண்டிவிட்டு அந்த நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தச் செய்துகொண்டே மறுபுறத்தில் மீள்கட்டுமானப் பணியில் தமது அரசு இயந்திரத்தைப் பலப்படுத்தித் தாம் நினைத்ததைச் சாதிக்க முயல்கிறார் ஜனாதிபதி என்ற அதிருப்தி நிலைப்பாடு புலிகளின் தலைமைக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்பில் இணக்கநிலை எட்டுவதற்கான வாய்ப்புகள் அருகிவருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

## பாடசாலை உபகரணங்களுக்கு கனடாவில் இருந்து நிதியுதவி!

கனடாவில் வதியும் கைதடி மக்கள் இங்குள்ள நான்கு பாடசாலைகளுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய இரண்டு லட்சம் ரூபாவினை அனுப்பியுள்ளனர்.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்,கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு வழங்கவென இந்நிதி அனுப்பப்பட்டுள்ளது.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு தட்டச்சு இயந்திரங்களும் கைதடி கலைவாணி வித்தியாலயத்திற்கு கணனி இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### சர்வதேச நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மதிப்பீடுகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு செவ்வாயன்று (இன்று) நாம் கலந்தாலோசனை நடத்த இருக்கின்றோம் - என்றார்கள் அவர்கள்.

மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் பேச்சுக்களில் அரசுத் தரப்பினரும், புலிகள் தரப்பினரும் முனைப்பாக இருக்கின்றார்கள் என எமக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் இருதரப்புமே அதிக ஆர்வமாக உள்ளன. ஏனைய விடயங்களைப் போலல்லாமல் இந்த விவகாரத்தில் காலம் தாழ்த்தாது விரைந்து முடிவை எட்டுவதில் இருதரப்பும் அவதானமாகவும் உறுதியாகவும் இருக்கின்றன என நாம் அறிகிறோம். எனவே, பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் விரைவில் ஒரு தீர்க்கமான முடிவு கிட்டும் என நாம் நம்புகின்றோம் - என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(எ-க-7)

### ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளையும், மறுதினமும் ஆழிப்பேரலை அனர்த்த விடயம் விவாதத்துக்கு வருகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண விடயத்தில் அரசுத் தலைமை தமது கட்சியைத் திட்டமிட்டு ஒதுக்கி, ஓரங்கட்டிச் செயற்படுகின்றது என ஜே.வி.பி. கருதுகின்றது. அதனால் அது சீற்றமுற்றிருக்கின்றது.

தவிரவும், அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாகப் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அரசுத் தலைமை கொள்கை அளவில் இணங்கியுள்ளது. அத்தகைய இணக்கத்தை ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கின்றது.

நாளையும், மறுதினமும் நடைபெறும் விவாதத்தில் ஜே.வி.பி. பங்குபற்றினால் இந்த இரண்டு விவகாரங்கள் தொடர்பாகவும் அது அரசுத் தரப்பை மோசமாக நாடாளுமன்றில் - பகிரங்கமாக - விமர்சிக்க வேண்டி நேரும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அப்படிச் செய்வது அரசுக்குள் உள்ள பிளவை அம்பலப்படுத்திவிடும்.

எனவே, அத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்க்கும் அதேசமயம், இவ்விடயத்தில் தமது ஆட்சேபத்தை யும், கடும் எதிர்ப்பை யும் அரசுத் தலைமைக்குத் தெரியப்படுத்தும் விதத்திலும் இந்த விவாதத்தைப் பகிஷ்கரித்தால் என்ன என்று ஜே.வி.பி. தலைமையின் ஒருசாரார் கருதுகின்றனர் எனவும் தெரிகின்றது.

அரசுக் கூட்டமைப்பில் ஜே.வி.பிக்கு 39 எம்.பிக்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

### 17 அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைச் செலுத்தியே படகு மூலம் வந்துள்ளனர். எனினும், இந்தியப் படகோட்டிகள் அவர்களை நட்ட நடுவில் இராமர் பாலப்பகுதியில் உள்ள மணல்திட்டு ஒன்றில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரையில் சேர்க்கப்பட்ட அகதிகள் அனைவரும் நேற்று (திங்கள்) மன்னார் நீதிவான் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின் நீதிவான் அகதிகளை விடுவித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

### கௌசல்யனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பி.சந்திரநேருவும் அந்த வாகனத்தில் இருந்தார். அவரது சாரதி வாகனத்தைச் செலுத்தினார். சந்திரநேருவின் மெய்ப்பாதுகாவலர்களான இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் கௌசல்யன் மற்றும் அவரின் உதவியாளர்களான நான்கு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் கூடவே பயணம் செய்தனர்.

நேற்றிரவு 7.45 மணியளவில் புனானைக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் 105 ஆவது மைல்கல்லில் பிள்ளையாரடி என்ற இடத்தில் அவர்களது வாகனத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் மூலம் அதிரடித்தாக்குதல் நடத்தப்பட்டது.

நாமல்கம என்னும் கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு காணிக்கை செலுத்திவிட்டு வாகனத்தில் ஏறியபோது பதுங்கியிருந்த சிலர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

கருணா குழுவின் எஞ்சியுள்ள ஓரிருவர் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. கௌசல்யனும் புலிப்போராளிகளான சுகந்தன், நிதிமாறன், குமிழன் ஆகியோரும் வாகனச்சாரதியும் இத்தாக்குதலில் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த சந்திரநேரு மற்றும் அவரது இரு மெய்ப்பாதுகாவலர்கள் மற்றுமொரு புலி உறுப்பினர் ஆகியோர் முதலில் வெலிக்கந்த வைத்தியசாலைக்கும் பின்னர் அங்கிருந்து பொலன்னறுவை வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் தரப்பில் கொல்லப்பட்ட மூத்த தலைவர் கௌசல்யன் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க-7)


CHEMISTRY CENTRE
Temple Road (Green Park முன்னே)
A/L 2007 General Chemistry
Mon., Fri. 5 - 6 p.m.
(சி-40842)
BY: அன்பழகன் B.Sc.

A/L 2006
D.C.M
யாழ் நகர்
Logic S.R.J.சுதன்
குறியீட்டு அளவையியல்
(ஆரம்பத்தில் இருந்து)
ஆரம்பம்:09-02-2005
புதன் 4.30.ப.நே.

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
A/L 2006
INORGANIC
பிரிவு II ஆரம்பம்: 09.02.2005
Wed., Mon. 3-4 p.m.
(சி-40842)
"INORGANIC PAPER"
ஆரம்பம்: 11/02 வெள்ளி 3 p.m.
"சேதனத் தாக்கப் பொறிநுட்பங்கள்" கருத்தரங்கு அநேக மாணவரின் வேண்டுகோளிற் கிணங்க 2ஆவது தடவையாக 08/02. செவ்வாய் 10.30இற்கு இடம்பெறும். கட்டணம் 50/=
அன்பழகன் B.Sc.

வன்னி மாவட்ட
உதயன் விளம்பரதாரர்களின் கவனத்துக்கு
வன்னி மாவட்ட வாசிகள் உதயன் பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்க வேண்டுமாயின் கீழ்காணும் முகவரியில் தொடர்புகொண்டு விளம்பரங்களை ஒப்படைத்துக்கொள்ளவும்.
"உதயன்"
விளம்பரப் பணிமனை,
1-9, தங்ககம், பிரதான வீதி, கிளிநொச்சி.
(சி-40859)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.